Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | புரட்டாதி 11 | புதன்கிழமை | (28.09.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 364



பறக்கும் மனிதன்

(11)



அமைதிக்கான பரிசு பெற்றவர்...

(13)



ஜே.வி.பி.யின் தலைவிதியை எண்ணிக் கவலை

(14)



தேசிய அணியில் விளையாடும் தகுதி

(06)

## 36 ஆயிரத்து 114 குடும்பங்கள் குடாநாட்டில் மீள்குடியமர காத்திருப்பு

### அரச அதிபர் இமெல்டா சுகுமார் தகவல்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இன்னமும் 36 ஆயிரத்து 114 பேர் மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக உள்ளனரென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாம், வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 8 ஆயிரத்து 195 பேர் தங்கியுள்ளதாகவும், இவர்களைக் கட்டம் கட்டமாக அவர்களது சொந்த (15 ஆம் பக்கம் பார்க்க)



## ருத்ரகுமாரனுக்கு எதிராக நடவடிக்கை அமெரிக்க உதவியும் பெறத் திட்டம்

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் பிரதமர் வீ.ருத்ரகுமாரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ருத்ரகுமாரன், புலிகளுக்கு நேரடியாக உதவிகளை வழங்கியமைக்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆதாரங்களை சமர்ப்பித்து அமெரிக்காவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில நாடுகளில் காணப்படும் புலிகளுக்குச் சொந்தமான கப்பல்களை ருத்ரகுமாரன் பராமரித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக நவீன ரக ஆயுதங்களைக் (15 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பாக

## ஐ.நா.வின் செயலற்ற தன்மை

## கனேடிய அரசாங்கம் அதிருப்தி



(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மேலதிக நடவடிக்கைகள் எடுக்காதமை குறித்து கனேடிய வெளிவிவகார அமைச்சர் John Baird அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நிபுணர்கள் குழு அறிக்கை நம்பத்தகுந்த ஆதாரங்களை முன்வைத்திருந்த போதிலும், இவ்விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை செயற்திறன் அற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66 ஆவது கூட்டத் தொடரில் கனேடிய வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே இவ்வாறு தனது அதிருப்தியை (15 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐ.நா பொதுச்சபையின் 66 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்க நியுயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை கொழும்பு திரும்பியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட சில நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

நியுயோர்க்கில் தங்கியிருந்த ஜனாதிபதிக்கு எதிராக கேணல் ரமேசின் மனைவி வத்சலாதேவி சார்பில் சட்டவாளர் ருத்ரகுமாரன், குடியியல் வழக்கு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இந்த வழக்கில் ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்ட நிலையில் அவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர சிறப்புரிமைகளால் சவேந்திர சில்வா பாதுகாக்கப்பட்டார்

### வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இராஜதந்திர சிறப்புரிமைகளால் பாதுகாக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அவருக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து நீதிமன்றத்தில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் வழக்குகளை விசாரிக்க யாழில் சிறுவர் நீதிமன்றம்

### நீதியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் சிறுவர் நீதிமன்றம் நிர்மாணிக்கப்படும் என்று நீதி அமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் தெரிவித்தார்.

அடுத்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறுவர் நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக நீதிஅமைச்சின் செயலாளர் சுஹத கம்லத் தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதல் காலநிலையைக் காட்டிய கோத்தாபய

### என்கிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது பாதுகாப்பு வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் அப்போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த ரொபேட் ஓ பிளேக் கூறிய போது, மோசமான காலநிலை காரணமாக இரு நாட்களாக ஜெட் போர் விமானங்கள் பறக்கவில்லை என அவர் பதிலளித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக் இது குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிய இரகசிய தகவல் குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி பாதுகாப்பு வலயத்தில் பலத்த பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த பீரங்கித் தாக்குதலில் 124 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும், 254 பொது மக்கள் காயமடைந்ததாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் (15 ஆம் பக்கம் பார்க்க)




## வட, கிழக்கு படைமுகாம்களை மேலும் பலப்படுத்த வேண்டும்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

புலிகளின் ஆயுதப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், பிரபாகரனின் அரசியல் பயங்கரவாதம் இன்னும் ஒழிக்கப்படவில்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

எனவே, தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் படைத்தரப்பினரைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, எக்காரணம் கொண்டும் குறைக்கக் கூடாது என தேசப்பற்றுள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

# இ.போ.ச. பேருந்தில் பிரயாணம்

# சிரமத்திற்கு உள்ளாகும் பயணிகள்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சில் பிரயாணத்தின்போது இடையில் ஏதாவது தடங்கல்கள் ஏற்பட்டால் அதில் பிரயாணம் செய்யும் பயணிகள் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகின்றமை வழமையாகிவிட்டது.

இவ்வாறான சம்பவம் ஒன்று நேற்று வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்சில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் வைத்தியசாலைக்கு முன்பாக மாலை 5.30 மணியளவில் இ.போ.ச. பஸ் ஒன்றிற்குக் காற்றுப்போயுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பஸ் பிரயாணிகள் இன்னொரு இ.போ.ச. பஸ்சில் பிரயாணம் மேற்கொள்வதற்கே ஏற்பாடு செய்யப்படுவது வழமை. தனியார் பஸ்கள் போல் மிகுதிப் பணத்தைப் பயணிகளிடம் ஒப்படைத்து பயணம் தொடர அனுமதிப்பதில்லை.

ஆனாலும் நேற்று குறிப்பிட்ட வழியால் கண்டியிலிருந்து யாழ்பாணம் நோக்கி வந்த இ.போ.ச. பஸ்சைப் பயணிகளும், நடத்துனரும் நிறுத்துவதற்கு முயற்சி செய்துள்ளனர். குறிப்பிட்ட பஸ் நிற்காது சென்றுள்ளது.


இரவு 8.00 மணிவரை எந்த வித மாற்று ஏற்பாடுகளும் இல்லாத நிலையில் பயணம் செய்த பயணிகள் நடத்துனருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டும் பயனில்லாமல், தனியார் பஸ்களில் சென்றதாகத் தெரியவருகின்றது.

பஸ்சிற்குக் காற்றுப்போனால் குறிப்பிட்ட பஸ்சின் சில்லினை மாற்றுவதற்கு டிப்போவில் இருந்து உரியவர்கள் வந்து சில்லு மாற்றும் வரை பஸ் அந்த வீதியில் அநாதரவாக நிற்பதும் வழமை என்பதும், இதனால் இ.போ.ச. பஸ்சில் பயணம் செய்பவர்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலையும் உள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பாக இ.போ.ச. நிர்வாகம் விரைந்து மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (12)

## சைக்கிள்கள் வழுங்கல்

ஒடடுசுட்டான் கற்சிலைமடு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவப் பணியாளர்களுக்கு இரண்டாம் கட்டமாக அண்மையில் 25 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதியுதவியுடன் சங்கத்தின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தினால தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)



யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. அ. புவனகாந் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் திருநாவுக்கரசு வேல் நம்பி சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறபபித்தனர். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

## இன்றும் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் நடத்தும் "யாழ்ப்பாண வாழ்வியல்" எனும் கண்காட்சி இன்றும் நடைபெறும் என கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.


எனவே, பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள் என பலரையும் கண்காட்சியினைப் பார்வையிட்டு பயன்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (எஸ்)

## சிறு விளம்பரம்

### தவறவிடப்பட்டது

இல 10/04, மூன்றாம் வீட்டுத் திட்டம் கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரன் - இராஜேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (586542877V) இரணைமடுச் சந்திக்கும் திருமுருகண்டிக்கும் இடையில் 03.09.2011 அன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கனகாம்பிகைக்குளம் கிராம அலுவலரிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (R/075)

## யாழ். குடாநாட்டிலும் விலங்கு விசர்நோய் தினம்



(யாழ்ப்பாணம்)

உலக விலங்கு விசர்நோய் தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட உள்ளது. நிகழ்வுகள் தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் காலை 9.30 மணிக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாகடர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர்.யூட். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார். (39)

## பாரம்பரிய வைத்தியர்களுக்கான இருநாள் கருத்தரங்கு கைதடியில்

பாரம்பரிய வைத்தியர்களுக்கும் அதனோடு இணைந்துள்ள சோதிடர்களுக்குமான கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் கடந்த 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கைதடி சித்த ஆயுரவேத போதனா வைத தியசாலையில் நடைபெற்றது.


சுதேச வைத்திய அமைச்சின் திட்டப்பணிப்பாளரும் உதவி ஆணையாளருமான உப்புள் வீரபத்திரான கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

சித்த ஆயுர்வேத வைத்திய முறைகளை நாம் எவ்வாறு கைக்கொள்ளவேண்டும். அவற்றினை நாம் வளர்த்துக்கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிந்த சிந்தனையில் ஆலோசனைகள் பலவற்றினை முன்வைத துள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் உப்புள் வீரபத்திரன சித்த ஆயுரவேத பாரம்பரிய வைத தியர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்றினையும் நடாத்தி அவர்களினது கருத்துக்களையும் கேடடறிந்துகொண்டார்.

அடுத்து பாரம்பரிய வைத்தியத் துறையைச் சேர்ந்த தமிழ்ப் பகுதிக்கான உதவிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி விசுவவேணி செல்வநாதன் பாரம்பரிய தேசிய வைத்திய நிறுவனத தைச் சேர்ந்த சோதிடம் சார்ந்த கரும முறை சம்பந்தமான தொடர பாடலுக்குப் பொறுப்பான வைத்திய கலாநிதி எஸ்.சமரக்கோன், ஜெயவர்த்தன பல்கலைக்கழக சோதிட விரிவுரையாளர், களனி வெளிவாரி பட்டப்படிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த சந்திரபாரதி ஜெயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டு சித்த ஆயுர்வேத வைத தியர்களுக்கும் சோதிடர்களுக்குமான கருத்துரைகளை வழங்கினர்.

மேற்படி பயிற்சிப்பட்டறையில சோதிடம், மணி மந்திரம், வர்மம் ஆகியவற்றினை எவ்வாறு நோயாளர்களுக்கிடையில் கையாண்டு



நோய்களைக் குணமாக்குவது என்ற விடயங்கள் பற்றி வைத்தியர்களுக்கிடையிலும், சோதிடர்களுக்கிடையிலும் கருத்துப்[illegible] மாற்றங்களும் இடம்பெற்றன.

கைதடி சித்த ஆயுர்வேத போதனாவைத்தியசாலையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் இருந்து சோதிடர்களும், சித்த ஆயுர்வேத வைத்தியர்களும், ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் மாணவர்களும் வருகைதந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## அரச சாராயம் விற்ற மூவர் பிடிபட்டனர்

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த மூவர் யாழ். மதுவரி நிலையப் பரிசோதகர்களால் பிடிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் மதுவரி நிலைய பரிசோதகர்களின் திடீர் சோதனையின்போதே ஒரு பெண் உட்பட மூவர கைது செய்யப்பட்டனர். இவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எஸ்)

## வன்னேரி மாணவர்கள் கல்விச் சுற்றுலா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளம் பாடசாலை மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இப்பாடசாலையில் தரம் 5 முதல் தரம் 11 வரை கல்வி பயிலும் மாணவர்களில் 80 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டனர். இவர்கள் மேல் மாகாணம், கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரசித்திபெற்ற தலங்கள் மற்றும் வரலாற்றுத்துறைசார் சான்றுகளையும் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (77)

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள், அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**(அ) செய்முறைப் பரீட்சை (சங்கீதம் / நடனம்)**

01. இசைமாணி / நடனமாணி 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருடத்தேர்வு - 2009
02. கலைமுதற் தேர்வு - 2009
03. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - I - 2008 & 2009
04. பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - II - 2008

**(ஆ) செய்முறைப் பரீட்சை (நாடகமும் அரங்கக்கலைகளும் EX.DTAG.3.2)**

**01. பொதுக் கலைமாணித் தேர்வு – 2008**

மேற்படி கற்கைநெறிகளில், நடன பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 12.10.2011 (புதன்கிழமை) தொடக்கமும், சங்கீத பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 13.10.2011 (வியாழக்கிழமை) தொடக்கமும் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார் மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாடகமும் அரங்கக்கலைகளும் பாடத்திற்கான (EX.DTAG.3.2) செய்முறைப் பரீட்சையை 08.10.2011 (சனிக்கிழமை) மற்றும் 09.10.2011 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தினங்களில் கலைத்துறை மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்,
27.09.2011 (C/950)

மனம் உங்களது சொல்கேட்டு நடந்தால் தான் உங்களது புத்தி சரியாக இருப்பதாக அர்த்தம். மனதைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் சரியாகப் புத்தி அமையப் பெறாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். எனவே மனதை அடக்கி வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

-காஞ்சிப் பெரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வசைபாடிய வாயால் வாழ்த்துதல்!

ஜே.வி.பி. உடைவுக்கு 'றோ'வின் சதியே காரணம் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. 'றோ' என்பது அமெரிக்காவின் சி.ஐ.ஏ. போல இந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான உளவு மற்றும் ஆய்வுப் பிரிவின் பெயராகும்.

நமது ஆயுதப் போராட்ட பிற்காலக் கூற்றில் ஏறத்தாழ இயக்கங்களுக்கு நிகராகப் பிரபலமாக இருந்த இந்த அமைப்பை யாரும் தெரியாதென்று சொல்லமாட்டார்கள்.

'இந்து' ராம் அவர்கள் பற்றிய செய்திக் குறிப்பை எழுதும்போது நம் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு குறிப்பிடுகிறது. "இந்துப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான 'ராம்' எண்பதுகளில் தமிழ் இயக்கங்களின் ஆதரவாளராகக் காட்டிக் கொண்டவர். பின்னர் தமிழ் இயக்கங்கள் இந்திய 'றோ'வின் கட்டுப்பாடுகளை மீறியபோது அவற்றைக் கடுமையாக எதிர்த்தவர். வன்னியில் இறுதிப்போரில் மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டபோது, தமிழ் மக்களின் இழப்புக்களை இருட்டடித்து மகிந்த அரசுக்கு முழு ஆதரவு தெரிவித்து ...தவர்..."

இவ்வாறு செய்திக் குறிப்பின் ஆரம்பத்தில் எழுதியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரபலமான அந்தப் பத்திரிகை, அதே செய்தியின் கடைசிப் பகுதியில் இப்படிக் குறிப்பிட்டுப் புளகாங்கிதத்தை வெளிப்படுத்துகிறது. "இலங்கையில் சமீபத்தில் நிகழ்ந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நம்பகத்தன்மை படைத்த ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது. அதேவேளை, முன்னணி சக்தியாக மாறியுள்ளது. இது பேச்சுகள் நடத்துவதற்கான உரித்துடைய ஓர் அமைப்பாகத் திகழ்கிறது என்றும் ராம் சுட்டிக் காட்டினார்." என்றெழுதுகிறது.

'றோ' சார்பானவர், வன்னியில் மக்கள் கொல்லப்படுவதற்கு ஆதரவாக இருந்தவர் என்று ஒருவரைக் குறிப்பிட்டு அவரது அங்கீகாரம் நமக்குத்தான் என்று பெருமைப்பட்டுக்கொள்ளவும் முடிவது ஆச்சரியம்தான்! இந்த "முன்கதவால் போவது ஒன்று; பின் கதவால் நுழைவது வேறு" என்ற மாதிரியான கூட்டமைப்பின் அரசியல் நேர்மையீனமே தமிழ் மக்களை இந்தக் கதிக்கு ஆளாக்கி வைத்...ப்பதாகத் தோன்றுகிறது.

இந்து ராம் விஷயத்தில் மட்டுமல்ல; இந்தியாவாகட்டும், அமெரிக்காவாகட்டும், ஐநாவாகட்டும், ஜெயலலிதா ஆகட்டும், கருணாநிதியாகட்டும், பிரேமதாசாவாகட்டும், சந்திரிகாவாகட்டும்... யாரிடமும் இவர்கள் அரசியல் நேர்மையோடு–கள்ளத்தனமற்று நமது மக்களின் பிரச்சினையைப் பேசியதில்லை. எங்களைத் தவிர எல்லோரும் எதிரிகள், துரோகிகள்; எவரிடமும் நம்மால் தீர்வுக்கான, நமது மக்களின் தேவைகளுக்கான உளசுத்தியோடு பேசமுடியாது என்றே காட்டி வந்திருக்கிறார்கள்.

தமது அரசியல் எதிரிகளை 'துரோகிகள்' என்று அடையாளப் படுத்தி அவர்களை ஓரங்கட்டி விடவோ அல்லது போட்டுத்தள்ளவோ இவ்வாறான வெளிநாட்டு உளவு அமைப்புக்களுடன் தொடர்பு, அரசாங்கத்துடன் தொடர்பு என்ற பழிசுமத்தல்களையே பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அதேசமயம், அத்தொடர்புகளைத் தாமே கள்ளத்தனமாகப் பேணிக்கொள்வதும் இரகசிய சுயநலன்கள் புளகாங்கிதங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதும் உண்டு.

ஆயுதப் போராட்ட ஆரம்ப வருடங்களில் சி.ஐ.ஏ உளவாளி என்று குறிப்பிட்டுப் 'பொட்டு வைத்து' மரங்களில் கட்டி விடுவது பரவலாக நடந்திருக்கிறது. பின்னர் 'றோ' வந்தது. புலிகளின் பிரதித் தலைவர் கூட றோவின் உளவாளி என்று குற்றஞ்சாட்டப்பட்டே கொல்லப்பட்டார். ஓமந்தை தாண்டி வருவோரிடமெல்லாம், "சமீபத்தில் இந்தியா போனீர்களா? றோவைச் சேர்ந்த யாராவது உங்களுடன் பேசினார்களா?" என்று விசாரிப்பதும் நடைமுறையிலிருந்தது. பிரபல தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் முதலாளியும் அதன் முன்னாள் ஆசிரியரும் கூட, றோவின் கையாட்கள் என்றே புலிகளால் முத்திரை குத்தப்பட்டு எச்சரிக்கையுடன் தூர வைக்கப்பட்டிருந்தனர் என்பதை யாவரும் அறிவார்கள்

இப்போது ஜே.வி.பி.யும் தங்கள் கட்சிக்குள் குழப்பம் செய்பவர்கள் 'றோவின் கையாட்கள்' என்றே சொல்வதாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள், றோவினால் ஏதாவது காரியம் தமக்கு ஆகுமென்றால் வசைபாடிய அதே வாயால் உடனே பாராட்டிவிடமாட்டார்கள் என்று நம்பலாம்.

– ஆசிரியர்

## நாட்டில் துஷ்பிரயோகமற்ற கல்வி; ஆசிரியர் சங்க மாநாட்டில் ஆராய்வு

(கொழும்பு)

கல்விச் செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் தனது 54 ஆவது வருடாந்த மாநாட்டின் ஊடாகக் கோரிக்கை விடுததுள்ளது.

அனுராதபுரம் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் சி.ஜயதுங்க, உபதலைவர்களான எஸ்.சிவராஜ்குமார், ஜே.ஜயசிங்க, எச்.எல். சமீன், வசந்தி திசாநாயக்க ஆகியோர் உள்ளிட்ட குழுத் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

நாடெங்கிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான பேராசிரியர்கள் இதில் கலந்துகொண்டு தமது பிரதேசங்களில் ஆசியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைபாடுகள் குறித்து தெவித்தனர். இந்த மாநாட்டில் "நாட்டின் துஷ்பிரயோகமற்ற கல்வி" என்ற தொனிப் பொருளில் விடயங்கள் நிலைமைகள் ஆராயப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவற்றில் முக்கியமாக நாட்டில் தற்போது கலவிச் செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் இராணுவப் பயிற்சியளிக்கப்படுவது பற்றி இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

பொதுவாகக் கல்வி அமைச்சின் செயற்பாடுகள் யாவும் நாட்டின் சட்ட திட்டங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாகவே நடைபெற்று வருகின்றன. இந்தப் போக்கைக் கண்டித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், ஊழல்கள் மோசடிகள் அற்ற ஒரு கல்விச் செயற்பாடு உருவாகுவதற்கு ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## இலங்கை - இந்தியக் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பமாகியது

(கொழும்பு)

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை - இந்திய பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்கோஷியா பிரின்ஸ் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடி வரையான தனது பயணத்தை ஆரம்பித்ததாகக் கப்பல் போக்குவரத்துப் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார். கப்பல் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

குறிப்பிட்டளவு பயணிகளுடன் இந்தக் கப்பல் பயணத்தை மேற்கொண்டுள்ளது.இந்த இலங்கை - இந்தியக் கப்பல் சேவை 30 வருடங்களின் பின்னர் கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கியுடன் இருவர் கல்கிஸையில் கைது

கொழும்பு)

கல்கிஸை பாரகும் மாவத்தையில் ரி - 56 ரக துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து மேலும் ரி - 56 ரகத் தோட்டாக்கள் 28 உம், வெளி நாடொன்றில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடடுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மொறட்டுவ மற்றும் ஹிதுரக்கொட பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் இருந்து மூன்று கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## கணினி பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயத் தகவல் தொழில்நுட்ப மையத்தில் கணினி தொடர்பாக பயிற்சி நெறிகளைப் பயின்ற மாணவருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸவரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சி நெறிகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய சகல மாணவர்களையும் தவறாது இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு வடமராட்சி வலய கணினி வள நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ, 109)

## கலந்துரையாடல் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலயத்தினூடாக நாளை வியாழக்கிழமை நடைபெறவிருந்த வலிகாமம் கல்வி வலய அதிபர்களுடனான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். இதில் முக்கியமான பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (உ)

## இந்திய மீனவரின் அத்துமீறலால் நாளாந்தம் 5 மில்லியன் இழப்பு

### அமைச்சர் ராஜித சேனாரத்ன

கொழும்பு)

இந்திய மீனவர்கள் எமது நாட்டு எல்லையினுள் வந்து மீன் பிடிப்பதனால் தினமும் 5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகிறது என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது 30 வருடங்களாக நடைபெறுகின்றது. எனினும் இதற்கு இனி மேல் இடம்கொடுக்கக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் எமது நாட்டு வளங்களை சுரண்ட இடமளிக்கமாட்டோம் எனவும் இனி அவர்கள் எமது கடலெல்லைக்குள் வரவிட மாட்டோம்.

எதிர்வரும் காலங்களில் இந்திய மீனவர்களுக்கு எந்தச் சலுகையும் வழங்கப் போவதில்லை எனவும் இந்தியா தமது மீனவர்களுக்கு எமது நாட்டில் மீன் பிடிக்க அனுமதி வழங்குமாறு கேட்டு கொண்டாலும் இனி அனுமதி வழங்க போவதில்லை. எமது நாட்டவர்களே 30 வருடங்களின் பின் இப்போது தான் சுதந்திரமாக மீன் பிடிக்கின்றார்கள். இலங்கை தமிழ் மக்களின் உரிமை பற்றி அதிகமாகப் பேசும் இந்திய ஏன் எமது நாட்டிற்குள் வருகிறது.

முதலில் கைது செய்த மீனவர்களை இந்திய அரசாங்கம் கேட்டு கொண்டதற்கு அமைய விடுதலை செய்தோம். எனினும் அது தொடர்பாக இந்திய தமிழ் நாட்டு அரசாங்கம் அந்த மீனவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை.இது தொடர்பான பேச்சுவார்த்தை ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. அது மட்டும் இல்லாமல் மீன்பிடி தொடர்பான சட்டங்களையும் இறுக்கமாக்கப்பட உள்ளதோடு இந்தப் பிரச்சினையை தீர்பதற்காக ஐ.நா.சபை குழு இலங்கைக்கு வரவுள்ளது. ஐ.நா. குழு இதில் தலையிடுவதற்கு முன இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண உள்ளோம். இதற்கு பிறகு இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் மீன் பிடிப்பார்களாயின் அவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கான விநியோக அட்டை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கமநல சேவை திணைக்களத்தினால் விவசாயிகளுக்கான விநியோக அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வட்டையை இதுவரை பெறாத விவசாயிகள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறும் பழைய அட்டை வைத்திருப்பவர்கள் கமநலத் திணைகளத்தில் புகைப்படமொன்றைச் சமர்ப்பித்து அட்டையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கமநலத் திணைக்கள உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார்.

விவசாயிகள் இவ்வட்டை மூலம் காலபோக மற்றும் பெரும்போகச் செய்கைக்கான உரம், விதையினம உபகரணங்கள் மற்றும் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (உ. 101)

## முதியோர் வாரத்தை முன்னிட்டு கொடி அறிமுக நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ள முதியோர் வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை கொடி அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் முதலாவது கொடியை யாழ். மாவட்ட முதியோர் பேரவைத் தலைவர் க. சிவகுமார், மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் வைத்து கிளை முகாமையாளர் இ. இலட்சுமணசர்மாவிடமும் பேரவை உப தலைவர் யோகராஜன், யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் திருமதி இமெல்டா சுமாரிடமும் வழங்கவுள்ளனர்.

இம் முதியோர் வாரத்தில் பாடசாலை மட்டத்திலும் முதி யோர் வாரக் கொடியை விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளதுடன் முதியோர் கௌரவிப்பு நிகழ்வையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

## உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கிடையே சித்திரப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.00 மணிக்கு அச்சுவேலி பொலிஸ் நிலைய வளவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் திறமையான மாணவர்களில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான தரங்களில் இரண்டு மாணவர்களும், தரம் ஆறு முதல் 12 வரையான தரங்களில் இரண்டு மாணவர்களும் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியை நெறிப்படுத்தும் முகமாக சித்திரப்பாட ஆசிரியர், ஆசிரியர்களின் பொறுப்பில் மாணவர்கள் சமூகமளிக்க வேண்டும். போட்டிக்குரிய தேவையான உபகரணங்கள் பொலிஸ் நிலையத்தினூடாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. இதில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் புத்தூரிலுள்ள ஐ.சி.எஸ். கணினி நிலையத்தினூடாக ஆறு மாத கால கணினிப் பயிற்சி நெறி இலவசமாக வழங்கப்படும். அதேவேளை, தரம் ஆறு முதல் 11 வரையான மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு அதே கல்வி நிலையத்தினூடாக Photo Shop, Coreldrow ஆகிய கணினிப் பயிற்சிகள் மூன்று மாத காலம் இலவசமாக வழங்கப்படுவதுடன் இப்பாடப் பகுதிகளுக்குப் பரீட்சை முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எனவே, பாடசாலை அதிபர்கள், இப்போட்டியில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (உ.03)

## பால் நிலையம் மீண்டும் திறப்பு

(ஆனைக்கோட்டை)

நவாலியில் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த பால் கொள்வனவு விற்பனை நிலையம் மீண்டும் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

முன்னர் இந்நிலையம் மூடப்பட்டபோது பாவனையாளர்களும், பண்ணையாளர்களும் பாலைப் பெற்றுக் கொள்வதிலும் மற்றும் விற்பனை செய்வதிலும் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் தற்போது இந்நிலையம் மீண்டும் திறக்கப்பட்டமையால் பால் கொள்வனவு மற்றும் விற்பனை சீராக இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (104)

# பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறோம்

### நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

(யாழ்ப்பாணம்)

பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவும், மக்களின் நல்வாழ்விற்காகவும் நாம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வண்ணார்பண்ணை மேற்கு (ஜே 98) கிராம அலுவலர் பிரிவின் மக்களது தேவைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று வள்ளுவன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உங்களது பிரதேசங்களில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் தேவைகள் தொடர்பாக எங்களது கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற பட்சத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக பத்திரகாளியம்மான் வீதியில் சேதமடைந்து காணப்படும் பாலத்தினையும் புனரமைப்புச் செய்ய வேண்டிய அஞ்சுதன் குளம் மற்றும் அதனோடிணைந்த வடிகால்களையும் பார்வையிட்டு குறித்த பாலத்தினை புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தனர்.

இதேவேளை, வள்ளுவன் சனசமூக நிலையப்



புனரமைப்பிற்கு நாடாளுமன்ற உறுப்பினருக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவினை ஒதுக்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் உறுதியளித்தார்.

சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் திவாகர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி நிவாரணம் இன்றும் வழங்கப்படும்

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் தற்போது வழங்கப்பட்டு வரும் புரட்டாதி மாதத்திற்குரிய சமுர்த்தி உலருணவு நிவாரண விநியோகம் இன்று புதன்கிழமை வரை வழங்குவதற்கான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் முழுவதும் நிவாரண விநியோகம் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் கடந்த 24ஆம் திகதியுடன் விநியோகம் முடிவுறுத்தப்படவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் குறிப்பிட்ட பயனாளிகளில் சிலர் தமக்குரிய பொருட்களை இதுவரை பெற்றுக் கொள்ளாமல் இருப்பது அறியப்பட்டுள்ளதாகவும், இக்கால நீடிப்பிற்குள் அவர்கள் தமக்குரிய பொருட்களை சங்கங்களுக்குச் சென்று உடன் பெற்றுக்கொள்ளுமாறு அவ் அதிகாரிகள் 'அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, புரட்டாதி மாதத்திற்குரிய காசுப்புள்ளிக்குரிய பண விநியோகம் இவ்வாரம் முத்திரைப் பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கிகளில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (26)

## உணவுப் பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத் தில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட அரசடி வீதியில் உள்ள தனியார் கிணறுகளில் இருந்து பெருமளவான பழுதடைந்த உணவுப் பொருட் கள் பொதுமக்களினால் அகற்றப்பட்டு வருகின்றன.

பச்சை அசிரி, குத் தரிசி, கொண்டல் கடலை, கௌப்பி, பயறு, மிளகு, நெஸ்பிறே பால்மா எனப் பல்வேறு பொருட்கள் மீக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களுக்குமான கலந்துரையாடல ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## ஒளிராத நிலையில் மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள அநேகமான மின்சார வீதி விளக்குகள் பழுதடைந்து ஒளிராது காணப்படுகின்றன.

இந்த மின்சார விளக்குகள் புதிதாக மாற்றியமைக்கப்படாததினால் இப்பகுதி வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

ஆஸ்பத்திரி வீதி, கோவில் வீதி, பிரதான வீதி, இராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, கொழும்புத்துறை வீதி போன்ற பிரதான வீதிகளிலே சில வீதி விளக்குகள் பழுதாகி ஒளிராது காணப்படுகின்றது. இவ் வீதிகளில் இரவில் போதிய வெளிச்சம் இன்மையால் பாதசாரிகள் போக்குவரத்துச் செய்வதற்கு சிரமப்பட்டு வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.(வி)






இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தின் ஏற்பாட்டில் கீறின் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்ற யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்குபற்றிய பயிற்சிப் பட்டறை நிகழ்வின்போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதியுமாகிய நா. செல்வக்குமரன் உரையாற்றுவதையும், இலங்கை மனித உரிமை யாழ். காரியாலய அதிகாரி ரீ. கனகராஜ் அருகில் இருப்பதையும், பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம் : பார்த்தீபன்)

## துண்டி ஐயனார் ஆலய புனரமைப்புப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயத்தின் புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் ஆலயத்தில் அண்மையில் பாலஸ்தானம் செய்யப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த கால யுத்தத்தினால் சேதப்பட்ட இந்த பழைமை வாய்ந்த ஆலயத்தினைப் புனரமைப்பதற்குக் கொடையாளர் சிலர் நிதியுதவியை வழங்கியுள்ளனர். (வி)

## யாழ். வரும் பாம்பாட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் பாம்பாட்டிகள் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வார இறுதியில் பத்துக்கும் மேற்பட்ட பாம்பாட்டிகள் யாழ். வருகை தந்து தமது வளர்ப்புப் பாம்புகளை மகிடி வாசித்து பாம்பாட்டத்தைக் காண்பித்தனர்.

வருட முற்பகுதியில் யாழ். நகரை முற்றுகையிட்ட இந்த பாம்பாட்டிகளின் தொல்லை தாங்காது பொலிஸார் அவர்களை விரட்டிக் கலைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# யாழ். புகையிரத நிலைய வளாகத்தில் குடியிருப்போரை வெளியேறப் பணிப்பு

## புகையிரத நிலைய அத்தியட்சகர்

(யழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையக் கட்டடத்தையும் அரசுக்குச் சொந்தமான காணிகளையும் தமது சொந்தத்தேவைக்காக பயன்படுத்திவருபவர்களும் அனுமதி இன்றி ஆக்கிரமித்து இருப்பவர்களும் உடனடியாக விலகவேண்டும் என புகையிரத வாணிப ஆத்தியட்சகர் றஞ்சித் பத்மலால் அறிவித்துள்ளார்.

புகையிரதப்பகுதிக்கு சொந்தமான காணிகள் கட்டடங்கள், விடுதிகள், உத்தியோகத்தர்களுக்கான வசிப்பிடங்களில் தங்கி இருப்பவர்கள் பதின் நான்கு நாட்களுக்குள் அந்த இடங்களில் இருந்து விலகவேண்டும் என்றும் தவறின் அத்துமீறி ஆக்கிரமித்து இருப்பதாக கொள்ளப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண புகையிரத நிலையக் கட்டடங்களையும் குவாட்டஸ் கட்டடங்களையும் பயன்படுத்துபவர்களுக்கு கடந்த சனிக்கிழமை சம்பந்தப்பட்ட பகுதி கிராம அலுவலர் மூலம் இந்தக் கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரப்பகுதியில் வாடகை வீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் இவர்கள் புறநகர்ப் பகுதிகளில் வீடு தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும். (23)

# சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இயந்திரப் பயன்பாடு பற்றி விளக்கம்

(நல்லூர்)

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'திவிநெகும' செயற்திட்டத்தின் கீழ் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன், ஐஸ் கட்டியை மூலப்பொருளாகக் கொண்டு சிற்றுண்டி தயாரிக்கும் கச்சால் உற்பத்தி இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பாக தற்போது. யாழ். குடாநாட்டு சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

மின்சாரம் மூலம் இயங்கும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் உபகரணத்தின் மூலம் விசேட நிகழ்வுகளில் சிற்றுண்டியை வழங்க முடியும். இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபா 25 ஆயிரம் வரை இலாபமீட்ட முடியுமென இவ் இயந்திரத்தின் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். செயலகத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இவ் உபகரணத்தின் செயற்பாடு தொடர்பாக பயனாளிகளுக்கும் அலுவலர்களுக்கும் விளக்கமளிக்கப்படவுள்ளது. ஆர்வமுடையோர் தமது பகுதி பிரதேச செயலக சமூர்த்தி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (26)

# அவசர கலந்துரையாடல்

(வடமராட்சி)

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை புலோ மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அசிரிய ஆளணி தொடர்பாகவும் கல்விசாரா உழியர்கள் தொடர்பாகவும் சகல தகவல்களையும் எடுத்துவருமாறு வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(28.09.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

புரட்டாதி 11 ஆம் நாள்.

இராகுகாலம் 12.02–1.32, சுபநேரம் 4.32 –6.02,

நட்சத்திரம்:அத்தம் பி.ப. 4.39 வரை

திதி: பிரதமை பி.ப. 3.12 வரை

நவராத்திரி ஆரம்பம் விரத நாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, சுற்றத்தார் ஆதரவு, நினைத்ததைச் சாதித்தல், தேக ஆரோக்கியம்.

**ரிஷபம:–** குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், மனச்சஞ்சலம், தேக சுகம் பாதிப்பு, மருத்துவச் செலவு.

**மிதுனம் :–**பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் விமர்சனம், சுற்றத்தா ஆதரவு, சுபகாரியப் பேச்சு ஆரம்பம்.

**கடகம்:–** குடும்பத்தில் கஷ்டம், பண முடை, தீயோர் நட்பு, கெட்டசகுனம், காணல், தேக சுகம் பாதிப்பு.

**சிம்மம்:–** பணம் வரும், குடும்பத்தில் நிம்மதி, சுற்றத்தார் ஆதரவு, நினைத்ததைச் சாதித்தல், தேக ஆரோக்கியம்

**கனனி :–** குடும்பத்தில் குழப்பம், பண முடை, தீயோர் சேர்க்கை, வாய்ப்புக்களை இழத்தல், தேக சுகம் பாதிப்பு.

**துலாம் :–**பணமுடை, குடும்பத்தில் கவலை, சுற்றத்தார் ஆதரவு, நண்பர் வருகை, வசதிக்குறைவு.

**விருச்சிகம்:–** கும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் மனச்சந்தோஷம், உண்மை நட்பை அறிதல், தேக சுகம்.

**தனுசு:–** பணமுடை, குடும்பத்தில் கவலை, வசதிக்குறைவு, அதிகாரிகள் சீற்றம், தேக நலம் பாதிப்பு.

**மகரம:–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், மன சந்தோஷம், உடம்பு நற்சுகம், வெளிநாட்டு உதவி.

**கும்பம் :–** பணமுடை, குடும்பத்தில் கவலை, தீயோர் சேர்க்கை வசதிக் குறைவு, உடல் உபாதை.

**மீனம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், சுற்றத்தில் வெறுப்பு சகோதர பாசம், தேக சுகம்.

# சிவில் பாதுகாப்புக் குழுக்கள்

(ஆனைக்கோட்டை)

நாவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியினால் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் கடந்த வாரம் அமைக்கப்பட்டுள்ளது. 20 பேர் கொண்ட இக்குழுவில் தற்போது தினமும் இவ்விரண்டு பேர் பொலிஸாருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்செயற்பாட்டைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தடுக்கப்படும் என பொதுமக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (104)

# குறும்பட வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் குறும்படம், ஆவணப்படம் பாடல் ஆகிய வற்றின் வெளியீடும் பயணிகள் கவனத்திற்கு கவிதைநூல் அறிமுகவிழாவும் எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ப.தெ.வ. அ. கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் ச. ஜெயபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளரும் சட்ட ஆலோசகருமான க. செவ்வேள் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# உங்களுக்குத் தெரியுமா? போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உங்களுக்குத் தெரியுமா do You Know போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் கோட்டக்கல்வி அலுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர் விபரம் வருமாறு.

முதலாம் இடம ஈ.பவித்திரா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

இரண்டாமிடம இ.கேதார கௌரி தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

மூன்றாம் இடம் கோ. மயூரி மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை.

நான்காம் இடம கா. கிருஸாலினி தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

ஐந்தாமிடம க. நிரோசினா மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை.

அறாமிடம தே. கோமகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

ஏழாமிடம (இருவர்) செ.நிவேதா. வல்வை மகளிா மகா வித்தியாலயம். ரா.கபில்ஜா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி (109)

# கோழிகளுக்கு தூக்கநோய்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கடும் வறட்சியால் கோழிகள் தூக்க நோய்க்கு இலக்காகி பாதிக்கப்படுவதாக கோழி வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். கடும் வறட்சி வெப்பம் போன்றவற்றின் தாக்கத்தினால் இந்தக் கோழிகள் நோய்த் தாக்கத்திற்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்படும் கோழிகளுக்குத் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. (வி)


# சக்தித் தெய்வங்களை வழிபடும் நவராத்திரி பூசை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



இந்துக்களால் அனுஷ் டிக்கப்படும் முக்கிய விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதபூஜை இன்று புதன்கிழமை ஆரம்பமாகி 9 நாட்கள் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படவுள் ளது.

இவ் விரத பூஜை இந்துக்களின் இல்லங்களிலும் ஆலயங்களிலும் கும்பம், கொலு வைத்து விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுவது வழமையாகும். இந்த வகையில் இன்று கொழும்புத்துறை மேற்கு வதிரி விநாயகர் ஆலயம், ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் அலயம், யாழ் பாண்டியந்தாழ்வு நரசிம்ம ஞானவைரவர் ஆலயம், நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயம், நீர்வேலி கந்தசுவாமி, ஆலயம், நீர்வேலி தெற்கு முருகையன் ஆலயம், உள்ளிட்ட அனைத்து ஆலயங்களிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் என்பன இடம் பெறவுள்ளது. இப்பூஜை வழிபாடுகள் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 9 நாட்கள் நடைபெற்று 10 ஆம் நாள் மானம்பூத் திருவிழாவுடன் நிறைவுபெறும். (வி)




எங்கட பெரியாஸ்பத்திரி வரலாற்றிலேயே நடைமுறைப்படுத்தப்படாத புதுமையொண்டு இப்ப நடைபெறுகிறது. அப்புடிப் பார்க்கேக்க எல்லாம் புதிசு புதிசாத்தான் வருகிறது. அது அதுகள் அந்தந்தக் காரியங்களைப் பொறுத்தே. அது நிண்டும் புடிக்கும். இடையிலேயே காலாவதியாவதும் உண்டு. அப்புடிக் காலாவதியாப் போற விசயம் பற்றித்தான் பேசப்போறன்.

ஒவ்வொருதரும் அதிகாரத்துக்கு வரேக்க எடுக்கிற காவடியளில் ஒண்டுதான். அதுகின்ற நிர்த்தாரணத்தைப் பொறுத்து அது வாழும் வளரும். வாழும் வளரும் வளரும் காரியங்களை நடைமுறைப்படுத்துவதில்தான் அந்தந்த அதிகாரிகளின் பெயர்களும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும். இல்லையேல் பருவப் பெயர்ச்சிக் காத்துக்கு அள்ளுண்டு போகும் குப்பையைப் போல் குப்பை வேலைகள் நிக்காது பாருங்கோ!

விசயத்தைச் சொல்லாமல் இவ்வளவு ஆலாபனை எடுக்கிறது. உங்களுக்கு விசரைக் கிளப்பும் எண்டு தெரியும். ஆனாலுமிது ஆலாபனை போட்டுச் சொன்னாத்தான் விசயமே தேறும். அந்தளவுக்கு ஒரு அற்பமான செயல். அது என்ன இந்த ஜனநாயக நாட்டில மக்களுக்கு ஏற்படுகின்ற பாதகங்களை நாடு தழுவிய மட்டில் எடுத்துச் சொல்லுவது அல்லது செல்வது எது?

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள் எண்ட ஊடகங்கள் எண்டதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. குடாநாட்டுச் செய்திகளை பெறுவதற்கு மையமாக இருக்கக் கூடியது நமது யாழ்.போதனா வைத்தியசாலை ஒன்றுதான்.

இங்கேதான் குடாநாட்டில் நடைபெறுகின்ற எந்தவகை இன்னல்கள், பாதகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். அனர்த்தம் நடைபெற்ற காலங்களிலும் இந்தச் சேவையை யாழ்.போதனா வைத்தியசாலை செய்து வந்ததை எவரும் மறந்துவிடவோ, மறுத்து விடவோ முடியாது.

அத்தகைய ஒரு இடத்தில் ஊடகவியலாளர்கள் தகவல்களைச் சேகரிக்க அவசியமான வேளைகளில் புகைப்படங்கள் பிடிக்கவும் தடைசெய்யப்பட்டுள்ளது எண்டால் எப்படி?

இந்தச் செயல் ஒரு ஜனநாயக நாட்டின் இயங்கு சக்தியில் கைவைத்த பாரதூரமான விடயமல்லவா? இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சகல விபரங்களும் அறிவிக்கப்பட வேண்டிய, அறிய வேண்டிய உரிமைகள் உண்டு.

இன்னமும் இங்கே சர்வாதிகாரம் நுழைந்துவிடவில்லை என்பதால் மக்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதேவேளை, சில அரச அதிகாரிகள் அந்தச் சர்வாதிகாரத்தை தமது கைகளில் எடுத்துக்கொள்ள எவ்விதம் அனுமதிப்பது? முன்னேறிக் கொண்டிருக்கும் எமது பிரதேசத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரமாகச் செய்திகளைச் சேகரிக்க இந்தக் கட்டுப்பாடுகள் உதவப்போவதில்லை. பகலில் வைத்தியசாலைப் பணிப்பாளரிடமும், இரவில் கடமையில் உள்ள வைத்திய அதிகாரியிடமும் எழுத்து மூலமான அனுமதி பெற வேண்டும் என்பது சுதந்திர ஊடகத்தின் கழுத்தை நெரிப்பது போலில்லையா?


# தேசிய அணியில் விளையாடக்கூடிய தகுதி வடக்கு வீரர்களுக்கும் உண்டென நிரூபணம்

## கூறுகிறார் சென் பற்றிக்ஸ் பயிற்றுநர் நிசாந்தன்

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் கிடைக்கப்பெற்ற இந்த வெற்றி தேசிய அணியில் விளையாடக் கூடிய தகுதியான வீரர்கள் வடக்கிலும் உள்ளனர் என்பதை வெளிக்கொணரும் ஒரு சந்தர்ப்பமாகவே நான் பார்க்கின்றேன் என்று சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பயிற்றுநர் எஸ். நிசாந்தன் தெரிவித்தார்.

நீர்கொழும்பு மாரிஸ்ரேலா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியில் அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான ஐந்து ஓவர் கிரிக்கெட் தொடரில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன் பட்டம் பெற்றமை குறித்து கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் இதற்கு முன்னர் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான முரளிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றியிருந்தோம்.

அந்தத் தொடரில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் மாரிஸ்ரேலா வெற்றிக் கிண்ணத் தொடரில் கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணமாக அமைந்தது.

இத்தொடரில் எமது வீரர்களின் செயற்பாடு சிறந்த முறையில் அமைந்ததுடன் நோபேட், கிளின்டரன் ஆகியோரின் சிறப்பான செயற்பாடே கிண்ணத்தை இலகுவாக வெல்வதற்கு காரணமாக அமைந்தது. எமது அணிக்குக் கிடைத்த வாய்ப்பை நாங்கள் சரி பயன்படுத்தியிருக்கின்றோம்.

எனவே, இது போன்ற தொடர்கள் மூலமாக எமது வடக்கில் உள்ள குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதன் மூலம் தேசிய தெரிவுக் குழுவின் பார்வையை யாழ்ப்பாணம் நோக்கி இழுத்து, 19 வயதுக்குட்பட்ட அணியில் எமது வீரர்களை உள்வாங்குவதே எனது முதல் நோக்கம்.

இதற்கு நாங்கள் கடினமாக உழைக்க வேண்டும். அந்த கடின உழைப்பும், முயற்சியும் இருந்தாலும் நாங்களும் சாதிக்கலாம் என்றார்.

## மாற்றுவலுவுள்ளோர் மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளிலுள்ள மாற்றுவலுவுடைய மாணவர்களுக்கான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய விசேட தேவை கல்வி ஆலோசகர் தெ. புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ. உதயகுமார் கலந்து கொண்டு வெற்றி பெறும் வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்களை வழங்கவுள்ளார்.

இப்போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் வடமராட்சி வலய விசேட தேவை கல்வி அலகு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (109)

## 5 ஓவர் மென்பந்து ஞானம்ஸ் சம்பியன்

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட ஐந்து ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனாகியது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் உபயகதிர்காமம் அணியும், கரவெட்டி ஞானம் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானம்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய உபயகதிர்காமம் அணி 4.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கர் 11 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அனுஜந்தன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய ஞானம்ஸ் அணி 4.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துஷ்யந்தன் 22, சுகந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த துஷ்யந்தனும், தொடரின் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சுகந்தனும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக அனுஜந்தனும் தெரிவானார்கள். (62)

## தேசிய மட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அரையிறுதியில் சென் ஜோன்ஸ் அணி

(மொறட்டுவ)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கிரிக்கெட் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதிப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் மொறட்டுவவிலுள்ள வேல்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கொழும்பு சென் பீற்றர் கல்லூரி அணியும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.

40 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் சென் பீற்றர்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய சென் பீற்றர்ஸ் கல்லூரி அணி 40 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹரிஸ் பொன் சேகா 50, பண்டார 21, விஜய நவீஸ்க 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வரர் மூன்று, துவாரகசீலன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 38.1 ஓவர்கள் நிறைவில் 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அஜித் 23, சிந்துஜன் 26, துவாரகசீலன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கருணரட்னா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் தெகிவளை ஜெய சிங்க மைதானத்தில் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் அம்பாந்தோட்டை சென் மேரிஸ் கல்லூரி அணியை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய இளைஞர் பட்மின்ரன் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் பட்மின்ரன் போட்டி இன்று முதல் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை கொழும்பு டி. எஸ். சேனாநாயக்க கல்லூரி, கல்கிஸ்ஸை சென்தோமஸ் கல்லூரி மற்றும் இலங்கை பட்மின்டன் சங்கத்திலும் போட்டிகள் இடம்பெறும்.

இந்த வருடத்திற்கான போட்டியில் 134 பாடசாலைகளில் இருந்து 2483 விளையாட்டு வீரர்களும் 2253 வீராங்கனைகளும் பங்கு பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப்போட்டி 18 இடங்களில் வலய, மாவட்ட ரீதியில் இடம்பெறும். யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களிலும் இடம்பெறவுள்ளமை இங்கு விசேட அம்சமாகும். இதேவேளை வடமாகாணத்தில் இருந்து 40 போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

இறுதிப் போட்டியில் ஆண்கள், பெண்கள் 11, 13, 17, 19 வயதுக் குட்பட்டவர்கள் போட்டியிடுகின்றனர். பெண்கள், ஆண்கள் இரட்டையர், கலப்பு போட்டிகள் 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் மோதுகின்றனர். இதில் 19 போட்டிகள் இடம்பெறும். இதே நேரம் 1265 வீர, வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர். அத்துடன் இவர்கள் 18 வலயங்களில் இருந்து மோது கின்றனர். இதேநேரம், ஒவ்வொரு வயது பிரிவில் இருந்து திறமை யான 8 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட அனைவருக் கும் பயிற்சி வழங்கப்பட்டு யுனக் கஸ், சன்ரைஸ் குழுவில் இணைத்துக் கொள்ளப்படுவர். பயிற்சி முடித்த இவர்களுக்கு விளையாட்டு அமைச்சினால் விசேட பயிற்சி, கருத்தரங்கு என் பன நடத்தப்பட்டு 2018 ஆம் ஆண்டு இடம்பெறும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

## வடமாகாணத்தின் முதல்வன்



(கொழும்பு)

இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையில் 'சண்டே ஒப்சேவர்' மற்றும் சிறிலங்கா மொபிரெல் ஆகிய நிறுவனங்கள் நடத்திய சிறந்த அணிக்கான தரப்படுத்தலில் வடமாகாணம் சார்பாக யாழ். மத்திய கல்லூரியின் 19 வயது அணி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

33ஆவது ஆண்டாக நடைபெற்ற இத்தரப்படுத்தல் நிகழ்வின் பரிசளிப்பு வைபவம் கடந்த 26ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சம்பியன் பட்டத்தை வழங்கினார்.

வடக்கு மாகாணத்தில் 2011ஆம் ஆண்டில் அதிக போட்டிகளில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி சம்பியனாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்கா, அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வென்றது பருத்தித்துறை

(வவுனியா)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் லீக் அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்றில் பருத்தித்துறை லீக் அணி வெற்றிபெற்றது.

வவுனியா லீக் அணிக்கும், பருத்தித்துறை லீக் அணிக்கும் இடையில் நடைபெற்ற இப்போட்டி கடந்த 26ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய பருத்தித்துறை லீக் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## ஐயனார் சம்பியன்

வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் துறையூர் ஐயனார் அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் புங்குடுதீவு சென் சேவியர் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே துறையூர் ஐயனார் அணி சம்பியன் பட்டதை வென்றது.

# இலங்கை அணியை மீளக் கட்டியெழுப்பி முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வேன்

## இதுவே முதல் பணி என்கிறார் பயிற்சியாளர் ஜெப் மார்ஷ்

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை கிரிக்கெட் அணி எதிர்நோக்கிய சரிவுகளிலிருந்து அணியை மீளக்கட்டியெழுப்பி முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதே தனது பிரதான இலக்கு என இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கும் ஜெப் மார்ஷ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டமையைக் காணக்கூடியதாக விருந்தது.

அவுஸ்திரேலியா இருக்கும் தரத்திலேயே இலங்கை அணியும் உள்ளது. கடந்த வருடங்களில் இலங்கை அணி சனத் ஜெயசூரிய, சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் போன்ற அனுபவம் மிக்க வீரர்களை இழந்துள்ளது. இலங்கை போன்ற நாட்டுக்கு இது பாரியதொரு இழப்பே.

இருந்தாலும் மத்தியூஸ் போன்ற இளம் வீரர்கள் உள்ளனர். இரண்டு சிறப்பான சுழற்பந்துவீச்சாளர்கள் உள்ளனர். அனுபவம் மிக்க வீரர்களை இழந்திருக்கும் நிலையிலிருந்து அணியை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் 12 மாதங்களுக்குள் இலங்கை அணி வீரர்கள் அவுஸ்ரேலிய அணிக்கு எதிராகச் சிறப்பாகச் செயற்படச் செய்வதே தனது இலக்கு. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி கடுமையாகப் போராடியிருந்தது. அவர்களுக்குள் இருக்கும் இந்தப் போராடும் திறனை மேலும் வளர்த்துவிட்டால் இலங்கை அணியை சிறந்த நிலைக்கு மீளக்கொண்டுவர முடியும் எனவும் தெரிவித்தார்.



# கால்பந்து போட்டி ஈராக்கில் தடை

(பாத்தாக்)

ஈராக்கில் கால்பந்து போட்டிகளை நடத்துவதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் தற்காலிக தடை விதித்துள்ளது. இதன்படி எதிர்வரும் ஒலிம்பிக், உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் போட்டிகளை ஈராக்கில் நடத்த முடியாது என பீபா குறிப்பிட்டுள்ளது.

ஈராக்கில் அர்பிலிலுள்ள பிரான் கொயிஸ் ஹரீரி மைதானத்தில் சர்வதேச கால்பந்து போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு கடைசியாக கடந்த 2 ஆம் திகதி ஜோர் தான் - ஈராக் அணிகள் மோதின.

இதில் ஜோர்தான் அணி 2- 0 என்ற கோல் கணக்கில் வென்றது. எனினும் இந்தப் போட்டியில் பல நிர்வாகச் சீர்கேடுகள் இடம் பெற்றதாக பீபாவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்தப் போட்டி குறித்த நேரத்தை விடவும் 10 நிமிடங்கள் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரங்கில் அளவுக்கு அதிகமான பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கான ஆசிய பிரிவு தகுதிகாண் சுற்றில் 'ஏ' பிரிவில் விளையாடி வருகிறது. இதில் ஈராக், ஜோர்தான், சீனாவுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் உள்ளது. அடுத்து வரும் ஒக்டோபர் 11 ஆம் திகதி ஷங்காயில் நடைபெறவுள்ள தகுதிகாண் போட்டியில் ஈராக் சீனாவுடன் மோதுகிறது.

ஈராக் கால்பந்தாட்ட ரசிகர்கள் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இத் தடை நீக்குமாறும் கோரியுள்ளனர்.

# 3ஆவது சுற்றில் மரியா ஷரபோவா



(டோக்கியோ)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வரும் பான் பசுபிக் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் தாய்லாந்தின் தாமரைன் தானாசுகர்னுடன் நேற்று முன்தினம் மோதிய ஷரபோவா 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

அடுத்த செட்டில் தானாசுகர்ன் கடுமையாகப் போராடி நெருக்கடி கொடுத்த நிலையில், ஷரபோவா 6-2, 7-5 என்ற கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, உள்ளூர் வீராங்கனை கிமிகோ டேட் கிரம் தனது முதல் சுற்று போட்டியில் 6-1, 3-6, 3-6 என்ற செட் கணக்கில் லக்சம்பர்கின் மினெல்லாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்.

# கொலின் கிளாஸசிக்கு இரண்டு வருடத் தடை

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பீபா) ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய கயானா கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் கொலின் கிளாஸசிக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பீபாவினால் வாழ் நாள் தடைக்கு உள்ளாகியுள்ள ஆசிய கூட்டு சம்மேளனத்தின் தலைவர் மொஹம்மட் பின் ஹம்மாதிடம் பணம் பெற்றது தொடர்பான குற்றச்சாட்டிலேயே கிளாஸிற்கு பீபா தடை விதித்துள்ளது.

மொஹம்மட் பின் ஹம்மாத் பீபா தலைமைப் போட்டியில் வெற்றி பெற தமக்கு சார்பாக வாக்களிப்பதற்கு. கரீபியன் கால்பந்து சம்மேளனங்களுக்கு பணம் வழங்கியதாக குற்றச் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இதில் கொலின் கிளாஸ் மூன்று ஒழுங்கு விதிகளை மீறியது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே அவர் மீது தடை விதிக்கப்பட்டதாக பீபா அறிவித்துள்ளது. இதன்படி கொலின் கிளாஸ் 26 மாதங்களுக்கு கால்பந்து தொடர்பான எந்தச் செயற்பாடுகளிலும் ஈடு பட முடியாது என்பது விசேட அம்சமாகும்.

அத்துடன் கொலின் கிளாஸசிக்கு 5,500 டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. எனினும் அவருக்கு இந்தத் தடைக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும். கிளாஸ் கடந்த 1989 ஆம் ஆண்டு முதல் கயானா கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக செயற்பட்டு வந்தார்.

# நெருக்கடியால் ஏற்பட்ட பயமே தோல்வியைத் தழுவக் காரணம்

(லண்டன்)



நெருக்கடி காரணமாக ஏற்பட்ட பயமே தோல்விக்கு காரணமாகும் என இங்கிலாந்து ருவெண்ரி 20 கப்டன் ஸ்வான் தெரிவித்தார்.

முதல் பாதி ஆட்டத்தில் எல்லாவற்றிலும் நாங்கள் சரியாக செயறபட்டோம். மீதி பாதி ஆட்டத்தில் எங்கள ஆட்டம் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்தது. இளம் மற்றும் அனுபவமற்ற வீரர்களை கொண்ட அணியாக நாங்கள் இருக்கிறோம். நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதை எல்லா வீரர்களும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இதேவேளை, இங்கிலாந்து மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான ருவெண்ரி 20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரு அணிகளுக்குமிடையிலான ருவெண்ரி 20 தொடர் சமனிலையில் நிறைவடைந்துள்ளது.

# வாங் இகான் சம்பியன்

(டோக்கியோ)



டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் சம்பியன் பட்டத்தை சீனாவின் வாங் இகான் கைப்பற்றிக் கொண்டார்.

இதன் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ஜேர்மனியின் ஜூலியானி சென்க்கும், சீனாவின் வாங் இகானும் மோதின.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வாங் இகான் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

# உடல் நலக்குறைவுடன் ஓடி சாதனை படைத்தது மகிழ்ச்சி




(பேர்லின்)

உடல் நலக்குறைவுடன் ஓடி, உலக சாதனை படைத்தது பெருமையாக இருக்கிறது என பெர்லின் மரதன் ஓட்டத்தில் தங்கம் வென்ற கென்ய வீரர் பாட்ரிக் மக்காவ் தெரிவித்தார்.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில் 'பெர்லின் மரதன்' ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இப்போட்டி மூலம் நல்ல அனுபவத்தைப் பெற முடியும் என எண்ணி களமிறங்கினேன். ஆனால், வெற்றி பெற்று சாதனை நிகழ்த்துவேன் என எதிர்பார்க்கவில்லை.

போட்டித் தூரத்தை 2 மணி நேரம் 3 நிமிடம் 38 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றதுடன், புதிய உலக சாதனை படைத்தது மகிழ்ச்சி என்றார்.

# சாதிக்கத் தயார் கம்பீர் அறிவிப்பு

(புதுடில்லி)

முழு உடல்தகுதியுடன் இருக்கிறேன். அடுத்து வரும் தொடர்களில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்துவேன் என இந்திய கிரிக்கட் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் கூறியுள்ளார். காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் இருந்து கம்பீர் விலகினார். அடுத்த மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் அணியில் இடம்பிடிப்பேன் எனவும் தெரிவித்தார்.

# இந்திய அணி நாளை அறிவிப்பு

(சென்னை)

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள அணி வீரர்கள் விபரம் நாளை அறிவிக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் ஒரு ருவெண்ரி 20 போட்டி இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

இதில் முதல் இரு ஒருநாள் போட்டிகளில் விளையாடும் இந்திய அணியே சென்னையில் நாளை அறிவிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டிகளில் வீரர்களின் செயற்பாடுகளை வைத்தே அடுத்த 3 போட்டிகளுக்கு வீரர்கள் தேர்வு இடம் பெறும் என்றும் தெரிவித்துள்ளது.

முதல் போட்டி ஒக்டோபர் 14ஆம் திகதி ஹைதராபாத்திலும், 2ஆவது போட்டி ஒக்டோபர் 17ஆம் திகதி டில்லியிலும் நடைபெறவுள்ளது. அடுத்த 3 போட்டிகள் முறையே ஒக்டோபர் 20,23,25 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. ருவெண்ரி 20 போட்டி ஒக்டோபர் 29ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பண்டாரநாயக்கவின் பெயரை இல்லாதொழிப்பதற்கு சதித்திட்டம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

பண்டாரநாயக்க பெயரை இல்லா தொழிப்பதற்கு பாரிய சதித் திட்டமொன்று தட்டப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குற்றஞ் சுமத்தியுள்ளார். சிங்கள தொலைக்காட்சி சேவையொன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் அத்தனகல்ல ஹொரகொல்லவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ன, முன்னாள் ஜனாதிபதியும் பண்டாரநாயக்கவின் புதல்வியுமான சந்திரிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இது குறித்து மேலும் அவர் அவ்வூடகத்தில் தெரிவிக்கையில் கட்சித் தலைமையகத்தில் எனது படம் அகற்றப்பட்டுள்ளது.

தந்தை, தாய் மற்றும் நாம தொடர்ச்சியாக 62 ஆண்டுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளோம்.தற்போது கட்சிக் கூட்டங்களில் எனது பெயரை குறிப்பிடுவதில்லை, எனினும் வீதியில் இறங்கினால் மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர்.

அந்தக் காலம் போன்று தற்போது இல்லை என மக்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர்.இரத்தம் வியர்வை சிந்தி இந்தக் கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றேன், எனினும், அமைச்சர்கள் என்னிடம் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான பண்டாரநாயக்கவின் ஐம்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளில் கட்சியின் பொதுச் செயலாளர் கலந்து கொள்ளவில்லை என்றார்.

# வீரவில இராணுவமுகாம் களஞ்சியம் வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணை

(கொழும்பு)

வீரவில இராணுவ முகாம் களஞ்சிய சாலையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இராணுவ முகாமின் 122 ஆவது படைப்பிரிவின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி குறிப்பிட்டார்.

அத்துடன் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள் வதற்கு இராணுவத் தளபதியால் விசேட விசாரணைக் குழு வொன்று நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை வீரவில இராணுவ முகாம் களஞ்சிய சாலையில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் ஒருவர் பலியானதுடன் இரண்டு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் திஸ்ஸமஹராம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி மேலும் கூறினார்.

# வீதி நிர்மாணிப்பு நடவடிக்கையால் சிங்கராஜ வனம் பாதிக்கப்படுமா?

## விசாரணைகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

வீதி நிர்மாண நடவடிக்கை காரணமாக சிங்கராஜ வனத்திற்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் ஆராயவதற்கு நியமிக்கப்பட்ட குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்தக் குழுவினர் நாளை வீதி நிர்மாணம் இடம்பெறும் பகுதியில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித துள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சுற்றாடல்துறை அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளை உள்ளடக்கி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை விரைவில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் யுனஸ்கோ அமைப்பிற்கு இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இரத்தினபுரி வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் வீதி தொடர்பான முதற்கட்ட அறிக்கையை தயாரித்துள்ளதுடன், இதன் மூலம் சிங்கராஜ வனத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படாதென தெரிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார். சூரியகந்த வரை செல்லும் இந்தப் பாதையின் நிர்மாணப் பணிகள் சுற்றாடல் அமைச்சினால் தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதப்போராட்டம் நடத்துவது புத்திசாதுரியமான தீர்மானமாகாது

## ஜே.வி.பி கிளர்ச்சிக்குழு ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

**ஆயுதப் போராட்டம் நடத்தும் திட்டம் எதுவும் கிடையாது. இலங்கையில் மட்டுமன்றி உலக அளவிலும் ஆயுதப் போராட்டம் நடத்துவது புத்திசாதுரியமான தீர்மானமாக அமையாது என ஜே.வி.பியின் கிளர்ச்சிக் குழு ஊடகப் பேச்சாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டங்களை நடத்துவதற்கான சந்தர்ப்பமும், சாத்தியமும் காணப்பட்டது. எவ்வாறெனினும், 1991ம் ஆண்டு சோவித் ஒன்றியம் வீழ்ச்சியடைந்ததனைத் தொடர்ந்து, அமெரிக்கா உலக அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது


அதன் பின்னர் ஆயுதப் போராட்டங்கள் எதுவும் வெற்றியடைவில்லை. ஆயுதப் போராட்டமொன்றின் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என கருதவில்லை. குறிப்பாக இது இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாக அமையும் மிக நீண்ட யுத்தத்தின் பின்னர் தற்போது மக்கள் நிம்மதியாக வாழ ஆரம்பித்துள்ளனர்.

கட்சியை விட்டு விலகுவது எமது நோக்கமல்ல தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கை தேசிய அரசியல் விவகாரங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சில முரண்பாடான நிலைமைகள் ஏற்பட்டதனை மறுக்க முடியாது.

கடந்த சில ஆண்டுகளாக கட்சிக்குள் இவ்வாறான ஓர் முரண்பாட்டு நிலைமை நிலவியது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்தமை, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு தேர்தலில் ஆதரவளித்தமை போன்ற பல்வேறு விடயங்களில் கருத்து முரண்பாடு நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் கட்சி சரியான தீர்மானங்களை எடுக்கத் தவறியுள்ளது. குறிப்பாக யுத்தம் இடம்



பெற்ற காலத்தில் ஜே.வி.பி.யின் தீர்மானங்கள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தின் தேசியவாதக் கொள்கைகளை எமது கட்சி பிரதிபலிக்கவில்லை பிரிவினை வாதத்தை நாம் எதிர்க்கின்றோம், எனினும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது.

ஜனநாயகத்துடன் கூடிய சமத்துவமான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தேசிய மாநாட்டைக் கூட்டி தீர்வு காண முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களை நாடு கடத்துவதற்கு பிரித்தானிய அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தும் நடவடிக்கைக்கு பிரித்தானிய அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழர்கள் விடயத்தில் பிரித்தானியாவின் இக் கொள்கையை ப்ரீடம் ப்ரோம் டோச்சர் என்ற அமைப்பு கண்டித்துள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்தும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் அகதிகளாக வந்தவர்களை பிரித்தானியா திருப்பியனுப்புவது எந்தவிதத்தில் நியாயம் என்று சித்திரவதையில் இருந்து விடுதலை என்ற அமைப்பு கேட்டுள்ளது.

அகதிகளாக பிரித்தானியாவுக்குள் வந்த சில தமிழர்களை பிரித்தானியா இலங்கைக்கு நாடு கடத்தவுள்ளது.இது ஏற்றுக்கொள்ளதக்க செயலல்ல என்று குறித்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கெய்த் பெஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 காணொளி இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றமையை காட்டியது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவும் இந்த போர்க்குற்றச்சாட்டை நிரூபித்துள்ளது. இதனைக்கொண்டு பிரித்தானியாவும் இலங்கை மீது மனித உரிமைகள் தொடர்பான அழுத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

எனினும் அந்த நாட்டில் இன்னும் தமிழர்கள் மீது மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பதை பிரித்தானியா அவதானிக்க தவறிவிட்டது என்று பெஸ்ட் குற்றம் சுமத்தியுள்ளார். அவுஸ்ரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளமையையும் பெஸ்ட் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தொழிற்சங்க நடவடிக்கையை தொடரும் ரயில் சாரதிகள்



(கொழும்பு)

இந்திய ரயில் என்ஜின் போக்குவரத்து நடவடிக்கையிலிருந்து விலகிக்கொள்வதற்கு ரயில் சாரதிகள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் தொடர்ந்து இடம் பெற்று குறித்த ரயில் என்ஜின்கள் போக்குவரத்தில் சாரதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் தொழிற்சங்க நடவடிக்கை தொடருமென பொறியிலாளர் சங்கத்தின் குழு உறுப்பினர் இன்திக தொடங்கொட தெரிவித்தார்.

இதேவேளை தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தாலும், இந்திய ரயில் என்ஜின்கள் போக்குவரத்துச் செயற்பாடுகள் தொடருமென,ரயில் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ.ஆர்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# நகர விமான நிலையமாக மாறும் இரத்மலானை விமான நிலையம்

(கொழும்பு)

இர்தமலானை விமான நிலையமானது நகர விமான நிலையமாக மாற்றப்பட்டு வெளிநாட்டு தனியார் ஜெட் விமானங்களுக்கும் சிறிய வான்கலங்களுக்கும் சேவை வழங்கப்படும் என விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகார சபைத் தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.


இந்த மாற்றத்தின் மூலம் நாட்டிற்கு மேலதிக வருமானமும் அந்நியச் செலாவணியும் கிடைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வரும் தனியார் ஜெட் விமானங்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் எனவே இரத்மலானை விமான நிலையத்தை நகர விமான நிலையமாக மாற்றுவதற்கான ஆரம்ப வேலைகள் ஏற்கெனவே ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை விமான நிலையம் இலங்கையின் முதலாவது சர்வதேச விமான நிலையமாகும். 1960 கள் வரை அது சர்வதேச விமான நிலையமாக இயங்கியது. யுத்த காலத்தில் அவ் விமான நிலையம் விமானப்படைத்தளமாக பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.


1. நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் பகுதியை நிழற்றுக?
2. சினிமாப்படங்கள் பார்ப்போர் எத்தனைபேர்?
3. நாடகம் பார்ப்போர் 32 பேர் எனின் நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் எத்தனை பேர்?
4. குறைந்தபட்சம் இரு நிகழ்ச்சியாவது பார்ப்போர் எத்தனை பேர்?
5. வகுப்பில் உள்ள மாணவர் தொகை 75 பேர் எனின் தரப்பட்ட ஒரு நிகழ்ச்சியினையும் பார்க்காதோர் நிகழ்வு யாது?

04. ஒரு பாடசாலை நுழைவாயிலில் ஒரு அலங்கார முகப்பு இரும்புக் கம்பிகளினால் ஆக்கப்பட்டுள்ளது.
AP = BQ = 6m உம் PQ = 13m உம் AD = BC = 8m உம் DR = CT = 3m உம் RS = 5m உம் ஆகும்.




1. அரைவட்டமொன்றின் விட்டம் என்ன?
2. பைதகரசின் தேற்றத்தின்படி DP இன் நீளம் என்ன?
3. நிழற்றிய பகுதியின் சுற்றளவு?
4. நிழற்றிய பகுதிக்கு மின்வயர் மூலம் நிற மின்குமிழ்கள் 6m இற்கு ஒரு மின் குமிழாக எத்தனை மின்குமிழ்கள் பொருத்த வேண்டும்?
5. நிறம் தீட்டிய பகுதியின் பரப்பு யாது?

05. மாணவர் குழு ஒன்று கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை வலையுரு வரையம் ஒன்று காட்டுகிறது.




அ) ஆயிடை 10-30 இல் எத்தனை மாணவர்கள் வகை குறிக்கப்படுகிறது?

ஆ) இவ்வலையுரு வரையத்தில் எத்தனை மாணவர்கள் விபரம் எடுக்கப்பட்டது?

இ) ஆகார வகுப்பு யாது?

ஈ) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணி ஒன்று அமைக்க?







சி.மகேந்திரன்

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி

# கல்வி முரசு




## கணிதம் - பகுதி I


**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

## பகுதி - A

1. ரூபா 78 விலையான தொப்பி ஒன்று வாங்கிய மாணவன் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் மீதியாக ரூபா 22 கிடைக்கும்.
2. 2.5 m ஐ cm இல் தருக.
3. உருவில் a இன் பெறுமானம் யாது.




4. தீர்க்க. 6/X = 2
5. கழிக்க. $1101_{இ} - 101_{இ}$
6. சுருக்குக. $(-0.2)^3$
7. அடைப்பு நீக்கிச் சுருக்குக. 7-2(X+3)
8. உருவில் A ∩ B என்ற பகுதியை நிழற்றுக.





9. 10,15,15,20,25,30,35 என்ற புள்ளிகளின் இடையம் யாது?

10. $\begin{pmatrix} 3 & 2 & 0 \\ 0 & -1 & -2 \\ 1 & 4 & 1 \end{pmatrix}$ தாயவரிசை தருக? எவ்வகைத் தாயம் எனத் தருக.

11. ஒரு நோயாளிக்கு மூன்று விதமான மருந்துவில்லைகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 20 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மற்றையது 25 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மூன்றாவது வில்லை 30 நிமிடத்துக்கு ஒரு தடவையும் உட்கொள்ள வேண்டும். காலை 8 மணிக்கு 3 விதமான மருந்து வில்லைகள் உட்கொண்டால் மீண்டும் எந்த நேரத்தில் மூன்றும் ஒன்றாக உட்கொள்ள வேண்டும்?

12. ஒரு நிமிடத்தில் 120 m தூரம் செல்லும் ஒரு வாகனம் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்.


13.




நாற்பக்கல் ABCD இல் X இன் பெறுமானம் யாது?


14. உருவில் PQ // SR ஆகும். PQRS ஒரு வட்டநாற்பக்கல் x, y இன் பெறுமானம் காண்க.

15.




X ≤ -3 உம் X > 2 என்ற சமனிலியை எண் கோட்டில் வரைக. X > 2 இல் நிறை எண்கள் இரண்டு தருக.

16.




ABCD ஓர் நாற்பக்கல் AD // BC ஆகும். AC, BC என்பன O இல் இடை வெட்டுகின்றன.

அ) முக்கோணம் BCD க்கு சமமான முக்கோணி எது?

ஆ) OCD முக்கோணிக்கு சமபரப்பான முக்கோணி எது?

17. ரூபா 85000 இற்கு ரூபா 8.50 விலைப்படி எத்தனை 10 ரூபாய் பங்குகள் வாங்கலாம்? பங்குகளின் மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?


18. $2x + 3y = 10$ என்ற நேர்கோட்டில் கீழே தரப்பட்ட எந்த ஆள்கூறுகள் தரப்பட்ட நேர்கோட்டில் அமைந்திருக்கும். A (1/2, 3) B(1,-3) C(-1,4)

19. 2/3, 2, 6......... பெருக்கல் விருத்தியில்
 அ) பொதுவிகிதம் என்ன?
 ஆ) n ஆம் உறுப்பை முதன்மை எண்களின் பெருக்கத்தின் சுட்டியாக எளிய வடிவில் தருக?

20. $S = n/2\,(a+l)$ ஆனது ஒரு கூட்டல் விருத்தியில் n ஆம் உறுப்புகளின் கூட்டுத் தொகையாகும். a ஐ எழுவாயாக மாற்றுக?


21. 8 மனிதர் ஒரு வேலையை 7 மணித்தியாலத்தில் செய்து முடிப்பர்.
 அ) இவ்வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள் ஆகும்?
 ஆ) அந்த 8 மனிதர்களும் அவ்வேலையை ஆரம்பித்து 2 1/2 மணித்தியாலங்களின் பின்னர் மின்தடை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அப்போது எத்தனை மனித மணித்தியாலம் வேலை செய்யப்படாமை இருந்தது.


22. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது தீர்க்க. $\log 12/5 + 2\log X = \lg 60$

23. 

ஒரு வட்டத்தில் AB, DC என்ற இரு நாண்கள் X ஐ இடைவெட்டுகின்றன. AX=12 cm, CX=8cm, AD=15cm ஆகும். BC இன் நீளம் யாது?


24. உருளை திண்மமொன்றின் விட்டம் 2r உம், உயரம் 3r உம் ஆகும். இரு வட்டப்பரப்புக்கும் வளைபரப்புக்கும் உள்ள விகிதம் எளிய வடிவில் தருக. (உருளையின் வளை பரப்பு $2\pi rh$)




25 

A,B என்பன வட்டங்களின் மையங்கள் ஆகும். AC, BC வட்டங்களின் தொடலிகள் ஆகும்.
 1) கோணம் ACB இன் பருமன் யாது?
 2) $AC = 4\sqrt{2}cm,\ BC = 2cm$ எனின் AB இன் நீளம் என்ன?


26. உருவில் A இறகு வடக்கே 15 km தூரத்தில் B யும் மேற்கே 15 km தூரத்தில் P யும் உள்ளது.




 அ) தரவுகளைப் படத்தில் குறிக்க?
 ஆ) B இல் இருந்து P இன் திசைகோள் யாது?


27. இருபடிச் சமன்பாடு தீர்க்க. $6x^2-3x=0$

28. I) AB என்பது காணியின் ஒரு எல்லையாகும்.
 II) O இல் இருந்து 7 m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைக?





 II) A,B இல் இருந்து மத்திய புள்ளியில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைந்து இரு ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளி P எனக் குறிக்க.

29. ஒரு சதுரத்தில் 3,3,2,5 என்ற இலக்கம் எழுதப்பட்டுள்ளது.




 அ) தீபன் எழுமாறாக 3 என்ற இலக்கம் தொடுகிறான். அவன் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?
 ஆ) தீபன் தொடும் சில நிமிட நேரத்தில் ராஜியும் வேறு ஒரு இலக்கம் தொடுகிறார். இருவரும் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?

30. அ) 1.5 லீற்றர் குளிர்பானத்தை 75ml கொண்ட குவளை எத்தனை பாவித்து முற்றாக நிரப்பலாம்?
 ஆ) குவளையின் கொள்ளளவு குளிர்பானத்தின் கொள்ளளவின் 1.5 லீற்றர் எத்தனை சத வீதமாகும்?





# பகுதி - B

01. சப்பாத்து சோடி ஒன்றின் உற்பத்தியில் மூலப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம் 2.3 ஆகும். ஒரு சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ரூபா 2000 செலவாகின்றது. உற்பத்தியாளன் 40% இலாபம் வைத்து விற்கின்றான்.
 1. மூலப்பொருள் செலவு யாது? கூலிச்செலவு யாது?
 2. உற்பத்தியாளன் அச்சோடிச் சப்பாத்தை விற்றவிலை யாது?
 3. மூலப்பொருள் 45% ஆலும் கூலிச் செலவு 10% ஆலும் அதிகரித்தால்
  I) புதிய மூலப்பொருள் செலவு யாது?
  II) புதிய கூலிச் செலவு யாது?
 4. புதிய உற்பத்திச் செலவு யாது?
 5. பழைய சதவீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ஒருவன் தனது பயணத்தின் 3/5 பங்கை புகைவண்டியிலும் எஞ்சியதில் 1/3 பங்கை பஸ் வண்டியிலும் மிகுதியை நடந்தும் பயணம் செய்தார்.
 அ) புகை வண்டியில் பயணம் செய்தபின் இன்னும் எவ்வளவு பங்கு பயணம் செய்ய உள்ளது?
 ஆ) புகைவண்டி, பஸ்வண்டியில் பயணம் செய்த மொத்தப் பங்கு யாது?
 இ) நடந்து செல்வதற்கு முழுவதன் என்ன பங்கு மிகுதியாக உள்ளது?
 ஈ) நடந்து சென்ற தூரம் 8km எனின் பயணத்தின் மொத்தத் தூரம் யாது?
 உ) நடந்து சென்ற தூரம் முழுப் பயணத்தின் என்ன சதவீதம்?

03. ஒரு பாடசாலையில் உள்ள க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பில் உள்ள மாணவர்கள் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்ப்பது தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.





A- நாடகம்
B- நடனம்
C- சினிமாப்படங்கள்


கணிதம் I - தரம் 11 - 2011 - கல்விமுரசு

ஒரு wingsuit பைலட் மலைப்பகுதியிலிருந்து ஒரு குறுகிய பிளவு மூலம் அதிக உயரம் சென்று சாதனை படைத்திருக்கிறார். ஹெலி ஒன்றில் 6000 அடி உயரத்திலிருந்து தன்னை தயார் படுத்திக்கொண்டார் Jeb Corliss, 75mph வேகத்தில் வீசும் காற்றுக்கு குறுக்காக சீனாவின் ஹீனன் பகுதியில் Tianmen mountain எனப்படும் மலைத்தொடரிலே இநத சாகசத்தை நிகழ்த்தினார். கால்கள் மற்றும் உடல் இடையே மெல்லிய சவ்வு போன்ற

# பறக்கும் மனிதன்





அமைப்பே இவரை காற்றில் நிலையாக வைக்க உதவுகிறது. உயரம் அதிகமாகும் போது ஏற்படும் புவியீர்ப்பு மாற் றத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியே இவரின் பறப்பு அமைந்தது. தனது தலைக்கவசத்தில் இருந்த் வீடியோக் கமரா மூலம் மிகவும் துல்லியமாக படங்களும் எடுக்கப்பட்டது. மலையின் நடுவே இயற்கையாக அமைந்த குகை போன்றதொரு பகுதியினூடாக மிக வேகமாக நுழைந்து மறுபகுதியினூடாக வெளிவந்தார். இந்த சாகச நிகழ்வைக் கண்டுகளிக்க மலையடிவாரத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கூடியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# நச்சுப்பொருள் இல்லாமல் கோப்பி



உலகம் முழுவதும் கோப்பிக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வணணம் உள்ளது. இதன் நன்மை, தீமைகள் குறித்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் பெரும்பாலானவை கோப்பியால் பாதிப்பு அதிகம் என்றே கூறுகினறன. கோப்பியில் உள்ள கபைன் என்ற நச்சு உடலுகககு தீமை அளிக்கும் என்று தெரிந்தும் கோப்பி அருந்துவதை கைவிட யாரும் முன்வருவதில்லை.

இந்நிலையில் மக்களின் மனநிலையை நன்கு அறிந்த உணவுகள் குறத்த ஆய்வு நிறுவனம் ஒன்று கோப்பி குறித்து சிறப்பு ஆய்வு மேற்கொண்டது. இதில் கபைன் இல்லாத ஆனால் காபியின் சுவை, நறுமணம் மாறாத மாற்றுப்பொருள் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

பிஸ்டாசியோ என்ற தாவரக் கொட் டையில் இருந்து கோப்பிக் கொட்டை தயாரிக்கும் அதே முறையில் தயாரிக்கப்பட்ட தூளைக் கொண்டு கோப்பி தயாரிக்கலாம். இது உடலுக்கு எந்தப் பக்க விளைவுகளும் பாதகமும் இல்லாதது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

குறிப்பாக கோப்பிக் கொட்டையில் இருக்கும் கபைன் என்ற நச்சு அறவே இதில் இல்லை என்று உத்தரவாதம் அளிக்கின்றனர். விரைவில் உலகம் முழுவதும் பிஸ்டாசியோ நடைமுறைக்கு வர உள்ளது

# ஆசிரியர்களுக்கு திறமையான ஐடியா!

கல்வி கண் திறக்கும் கடவுள் என்று சொல்லக்கூடிய ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் பல வகையான ஐடியாக்கள் மற்றும் செயல் முறைகளை தெளிவாக எடுத்துச்சொல்ல ஒரு தளம் உள்ளது. ஒரு கடினமான பாடத்தை எப்படி நடத்தினால் மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்வார்கள் என்பதில் தொடங்கி கேள்வித்தாள் எப்படி உருவாக்க வேண்டும் என்பது வரை அனைத்து விதமான ஐடியாக்களையும் நமக்கு அளிப்பதற்காக ஒரு பயனுள்ள தளம் உள்ளது. A to Z Teacher Stuff இது தான் இணையதளத்தின் பெயர் ஆசிரியர்களுக்கு எப்படி அவர்களின் அறிவை மேலும் பட்டை தீட்டலாம் என்று சொல்லும் இத்தளத்திற்கு சென்று நாம் Word Shapes Worksheet Generator, Word Search Maker, Handwriting Worksheet Generator, Leveled Books Database, Science Experiments Teacher Tools , Teacher Tips, Lesson Plans, Printables & Worksheets என அனைத்தும் பயன்படுத்தலாம் தேவையான பிரிண்ட் செய்த பேப்பரை தரவிறக்கம் செய்யலாம். ஆசிரியர்களுக்கு பாடத்தில் ஏழும் சந்தேகங்களுக்கு விடை அளிக்க பல திறமையான ஆசிரியர்கள் உள்ளனர். ஒவ்வொரு நாளையும் எவ்வாறு திட்டமிட்டு பாடம் நடத்த வேண்டும். பாடத்தில் உள்ள முக்கியமானவற்றை மாணவர்கள் மனதில் பதியும்படி சொல்ல என்னென்ன நுணுக்கங்கள் எல்லாம் உள்ளன என்பதை அழகாக பட்டியலிட்டு சொல்கிறது இத்தளம்.

இணையதள முகவரி:- http://atozteacherstuff.com/

## ASCII வரைபடம் வரைய

ASCII(American Standard Code for Information Interchange) ஒவ்வொரு விசைக்கும் இணையான ஒவ்வொரு Character-I வைத்து எளிதாக சில நிமிடங்களில் (Ascii art) படம் வரையலாம். இத்தளத்திற்கு சென்றவுடன் தோன்றும் விண்டோவில் இடது பக்கம் இருக்கும் வடிவங்களில் ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து வரையத் தொடங்கலாம். ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுத்து பலகையில் வரையும் அந்த டூல் பற்றி அறிந்து கொள்ளலாம். எழுத்துக்களை கூட நாம் சேர்க்க விரும்பும் கோணத்தில் உருவாக்கலாம். எல்லாம் வரைந்து முடித்த பின் Export என்பதை சொடுக்கி எளிதாக கொப்பி செய்யலாம், Html கோப்பாக மாற்ற விருப்பம் உள்ளவர்கள் Export Html என்பதை சொடுக்கி எளிதாகச் சேமிக்கலாம்.

இணையதள முகவரி:-
http://www.asciiflow.com/

கணினி மூலை


# நடனமாடும் காடு





காடுகள் என்றாலே சிலருக்கு பயம். இருண்ட காடு என்றால் இன்னும் பயம் அதிகம். ஆனால் உலகில் இயற்கையாகவே மிகவும் விநோதமான தோற்றம் பெற்ற காடுகளில் ஒன்றைப் பற்றித்தான் நாம் இங்கு பேசிக் கொண்டு இருக்கின்றோம். ரஷ்யாவில் Kaliningrad நகரத்தில் Coronian Spit தேசிய பூங்காவுக்கு அருகில் அமையப் பெற்று உள்ளது நடனம் ஆடும் காடு. இங்குள்ள மரங்கள் வளைந்த தோற்றம் உடையவை. ஆகவேதான் இக்காட்டுக்கு இப்பெயர் ஏற்பட்டு உள்ளது. இங்குள்ள ஒவ்வொரு மரமும் அசாதாரண ஆனால் அழகான தோற்றப்பாடு கொண்டது. ஏன் இங்குள்ள மரங்கள் இத்தோற்றத்தைப் பெற்றன? என்பது குறித்து ஏராளமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பலத்த காற்றுக் காரணமாகவே மரங்கள் இத்தோற்றத்தைப் பெற்றன என்று கூறுபவர்களும் உள்ளனர். ஆயினும் உண்மையான காரணம் இன்று வரை மர்மமானதாகவே இருந்து வருகின்றது.






மனிதனின் மிக நெருக்கமான நண்பன் நாய் என்பது உலகம் அறிந்த உண்மை. இறுதி வரை எஜமானர்களுக்கு மிகவும் விசுவாசம் ஆனவை. சிறந்த காவலாளிகள். நம்பிக்கையான மெய்ப் பாதுகாவலர்கள். ஆனால் ஒரு மாபெரும் உண்மை ஒன்று இருக்கின்றது. அது என்னவென்றால் மனிதர்களின் கட்டுப்பாட்டில் நாய்கள் இருக்கின்றன. ஒரு வேளை நாய்களின் கட்டுப்பாட்டில் மனிதர்கள் இருப்பார்களானால் எவையெல்லாம் நடக்கக் கூடும். சிரிக்கவும் சிந்திக்கவும் இப்படங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

# ப.சிதம்பரம் பதவி விலக விருப்பம் சோனியா, மன்மோகனிடம் தெரிவிப்பு

(புதுடில்லி)

2ஜி விவகாரத்தில் சக அமைச்சரா லேயே விமர்சனத்துக்குள்ளாகியுள்ள உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நேற்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசினார். அப்போது தான் பதவியிலிருந்து விலக விரும்புவதாகத் தெரிவித்தார். அவரை பொறுமையுடன் இருக்குமாறு சோனியா வேண்டிக் கேட்டுக் கொண்டதாக தெரிகிறது.

தான் பதவி விலக விரும்புவதாக பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் டில்லி அரசியல் வட்டாரம் பரபரப்படைந்துள்ளது.




2ஜி விவகாரத்தில் நடந்த முறைகேடுகளைத் தடுக்கத் தவறி விட்டார் அப்போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் என்று மத்திய நிதியமைச்சகம் பிரதமர் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பியிருந்தது. பிரணாப் முகர்ஜியின் ஒப்புதலுக்குப் பின்னரே இது அனுப்பப்பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்தார் ப.சிதம்பரம்.

இதையடுத்து அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங் அவசரம் அவசரமாக ப.சிதம்பரத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சமரசம் பேசினார். தனது ஆதரவையும் அவருக்குத் தெரிவித்தார். அதேபோல பிரணாப் முகர்ஜியும் ப.சிதம்பரத்தைத் தொடர்பு கொண்டு பேசினார். அவசரமாக நாடு திரும்பிய முகர்ஜி, செய்தியாளர்களிடம் பேசுகையில், காங்கிரஸ் கட்சிக்கும், மத்திய அரசுக்கும் தூண் போல விளங்குபவர் ப.சிதம்பரம். அவர் ஒரு மதிப்பு மிக்க சகா என்று தெரிவித்தார்.

# தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் தே.மு.தி.க-மார்க்சிஸ்ட் கூட்டணி

(சென்னை)

தமிழக உள்ளூராட்சித் தேரதலில் புதிய திருப்பமாக தே.மு.தி.க - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இடையே கூட்டணி ஏற்பட்டுள்ளது. இந்த அணியில் இடம்பெற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஆலோசித்து வருகிறது.

இந்த மூன்று கட்சிகளும் அ.தி.மு.க அணியில் இடம் பிடித்து கடநத தேர்தலை சந்தித்த கட்சிகளாகும். உள்ளூராட்சித் தேர்தலில் அ.தி.மு.க தன்னிச்சையாக செயற்படத் தொடங்கியதை அடுத்து இக்கட்சிகள் அதிருப்தி அடைந்தன.




அதன்விளைவாக தே.மு.தி.க தனித்து போடடியிடும் முடிவை முதலில் எடுத்தது. இரண்டு, மூன்று கட்டப் பேச்சு வார்த்தைக்குப் பின்னர் மார்க்சிஸ்ட் கட்சியும் அ.தி.மு.க.விடமிருந்து ஒதுங்கிக் கொண்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் நேற்று தனது முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருந்தது. ஏற்கனவே புதிய தமிழகம் கட்சியும் விலகியுள்ளது.

அடுத்த மாதம் 17, 19 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் பலத்தமும் முனைப் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# ராசா, கனிமொழி மீது புதிய வழக்கு

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்ததாக மத்திய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உட்பட 17 பேர் மீது புதிய குற்றச்சாட்டை சி.பி.ஐ. திங்கள்கிழமை பதிவு செய்தது.

இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் மோசடி, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக ஆ.ராசா, கனிமொழி, சரத்குமார் உட்பட 17 பேர் மீது சி.பி.ஐ. ஏற்கெனவே வழககுப் பதிவு செய்துள்ளது. இந் நிலையில், மத்திய தொலைத்தொடர்பு அமைச்சராகப் பதவி வகித்த ஆ.ராசா, அவரது தனிச் செயலாளர் சண்டோலியா, மத்திய தொலைத தொடர்புத்துறை முன்னாள் செயலாளர் பெகுரா ஆகியோர் அலைக்கற்றை ஒதுக கீட்டில் அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருப்பதாகக் கூறி, சதித் திட்டம் தீட்டியதாக புதிய வழக்கை சி.பி.ஐ. பதிவு செய்துள்ளது. இதற்கு உடந்தையாக இருந்ததாக கனிமொழி, சரத்குமார் பல்வா உள்ளிட்ட 14 பேரும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ராசா மீது முன்னர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 7 ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை கிடைக்கும். ஆனால், இப்போது சுமத்தப்பட்டிருக்கும் நம்பிக்கைத் துரோகம் தொடர்பான குற்றச்சாட்டு நிருபிக்கபபட்டால் ராசா உள்ளிட்டோருக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை அல்லது அபராதத்துடன் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

# மோடி உண்ணாவிரதச் செலவு: கணக்குக் கேட்கிறார் ஆளுநர்!

(ஆமதாபாத்)



குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் நல்லிணக்க உண்ணாவிரதத்துக்கு செய்யப்பட்ட செலவு குறிதது கணக்கு கேடடு கடிதம் எழுதியுள்ளார் அந்த மாநில ஆளுநர் கமலா பெனிவால்.

மோடி தனது பிறந்த நாளான செப்ரெம்பர் 17-ஐ ஒட்டி அனைத்துப் பிரிவினரிடையே நல்லிணக்கம் ஏற்பட மூன்று நாள் உணணாவிரதம் இருந்தார். இதில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், ஆன்மிகத் தலைவர்கள் பங்குபெற்றனர்.

இந்த நிகழ்சசிக்கு ஏற்பட்ட செலவுக் கணக்கை அளிக்கும்படி கேட்டு ஆளுநர் கடிதம் எழுதியுள்ளார். ஆளுநரின் கணக்குக் கேட்கும் கடிதம் புதிய சர்ச்சையைக் கிளம்பியுளளது. உண்ணாவிரத நிகழ்ச்சிக்கு உண்டான செலவுகள், இந்தச் செலவுகளை செய்ய எவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது மாநில அரசின் நிர்வாகத்தில் தலையிடுவதாகும். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசைக் கவிழ்க்க சதி செய்யும் ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டும்" என்று மோடி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

# மீண்டும் தீவிரமடைகிறது தெலுங்கானா போராட்டம்

(ஹைதராபாத்)

தெலுங்கானா போராட்டம் தொடர்ந்து 16 ஆவது நாளாக தீவ்ர மடைந்து வருகிறது. நேற்று முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் முக்கிய தொழிற்சாலைகள் முடங்கியுள்ளன. ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்கக் கோரி பல கட்டங்களாகப் போராட்டங்கள் நடந்துவருகின்றன.

மேலும் தெலுங்கானா ராஷ்டரீய சமிதி கட்சி, தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக்குழு ஆகியன இந்தப் போராட்டத்தினை தீவிரப்படுத்தி வருகின்றன. தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த 10 மாவட்டங்களில் அரசுத்துறையைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள், ஊழியர்களும் கடந்த 15 நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இன்று 16 ஆவது நாள் போராட்டம் தொடர்கிறது.

மேலும் தெலுங்கானா பகுதிக்குட்பட்ட தனியார், பொதுத்துறை நிறுவன தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்களும் நேற்றுமுன்தினம் முதல் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் முக்கிய தொழிற்சாலைகளான பெல், ரெட்டி அன்ட் மாட்ரிக்ஸ், அரபிந்தோ போன்ற தொழிற்சாலைகள் முடங்கியுள்ளன. தெலுங்கானாவைப் பிரித்துத் தனிமாநிலமாக அறிவிக்கும் வரை போராட்டம் மேலும் உக்கிரமாகத் தொடரும் என போராட்டக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# கதாநாயகனாக கணவர் கதாநாயகியாக தோழி!




(சென்னை)

ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா இயக்கும் படத்தில் கதாநாயகனாக அவரது கணவர் தனுஷ் நடிக்கிறார். கதாநாயகியாக அவரது நெருங்கிய தோழியும் கமல்ஹாசனின் மகளுமாகிய ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார். படத்திற்கு "3" என விநோத தலைப்பிட்டுள்ளார்.

தங்கள் அப்பாக்கள் நிச்சயம் படப்பிடிப்புக்கு வந்து தாங்கள் எப்படி பணிபுரிகிறோம் என்பதைப் பார்ப்பார்கள் என்று ஐஸ்வர்யாவும், ஸ்ருதியும் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனராம். ஆனால், படப்பிடிப்பு தொடங்கி இத்தனை நாட்களாகியும் அப்பாக்கள் வராததால் மகள்கள் வருத்தம் அடைந்துள்ளனர்.

# அரசியலில் எல்லாம் சகஜம் கருணாநிதி சொல்கிறார்



(சென்னை)

ஸ்பெக்ட்ரம் வழக்கு முடியும் வரை, சோனியாவை சந்திக்க மாட்டேன், என, தி.மு.க., தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

டில்லி சென்று சோனியாவைச் சந்திப்பீர்களா? என்று நிருபர்கள் கேட்டதற்குப் பதிலளித்த கருணாநிதி,

நான் இந்த வழக்குக்காகவே நீதிமன்றிற்குச் சென்றிருக்க வேண்டும். இப்போது சென்றால் பத்திரிகைக்காரர்களாகிய நீங்கள் எல்லாம் சும்மாயிருக்க மாட்டீர்கள். உங்கள் கற்பனைக் குதிரையை எப்படி வேண்டு மானாலும் ஓடவிட்டு விடுவீர்கள். அதனால் தான், இந்த வழக்கு முடிந்த பின்னரே டில்லி சென்று சோனியாவைச் சந்திப்பேன். நான் மனித நேயம் உள்ளவன், மனிதாபிமானம் உள்ளவன். தோழமைக் கட்சியின் தலைவரை எந்தளவிற்கு மதிக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளவன் என்று கூறினார்.

காங்கிரஸ் அரசு சிதம்பரத்தை பாதுகாக்கும் அளவிற்கு, ராசாவை, கனிமொழியை பாதுகாக்கவில்லை என்ற வருத்தம் உங்களுக்கு உள்ளதா? என்ற கேள்விக்கு,

அரசியலில் வருத்தப்படவோ, மகிழ்ச்சி அடையவோ, இதுபோன்ற நிகழ்வுகளை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை எனறு பதிலளித்தார் கருணாநிதி.

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானில் பஸ் விபத்து 37பேர் பலி: 70 பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் மலைப்பகுதியில் சென்று கொண்டிருந்த பள்ளி பேருந்து விபத்துக்குள்ளான தில் 37 பேர் பலியானதுடன் 70க்கும் மேற்பட் டோர் படுகாயமடைந்துள்ளனர். பாகிஸ்தானின் லாகூர் அருகே உள்ள பாசிலாபாத் நகரில் உள்ள பள்ளி மாணவர்கள் காலார் கார்பகுதிக்கு சுற் றுலா சென்றனர். பஸ் சாவல்நகர் அருகே சென்று கொண்டிருந்த போது திடீரென பள்ளத்தில் கவிழ்ந்தது. இவ்விபத்தில் பஸ்சில்பயணம் செய்த பள்ளிக்குழந்தைகள் 37 பேர் பலியாயினர் .70க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்து அருகில் இருந்த கிராம மக்கள் கூறுகை யில் அதிகளவிலான கூட்டம் மற்றும் போதிய மின்சார வசதி இல்லாததால் விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தனர். படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள ராவல்பிண்டியில் உள்ள இராணுவ மருத்து வமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தானுக்கான உதவிகளை நிறுத்த அமெரிக்க நாடாளுமன்றில் தீர்மானம்

(பாக்தாத்)


பாகிஸ்தானுக்கான அனைத்து உதவிகளையும் நிறுத்த அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்வுள்ளது.

பாகிஸ்தானின் உளவுப்பிரிவு ஆப்கானிஸ்தா னின் ஹக்கானி அமைப்புக்கு உதவிசெய்து வரு கிறது என அமெரிக்கா குற்றம் சாட்டியது ஆனால் அதற்கு மறுப்பு தெரிவித்த பாகிஸ்தான் வெளி யுறவுத்துறை அமைச்சர் அமெரிக்காவையே குற்றம் சாட்டினார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு வழங்கப் படும் அனைத்து உதவிகளையும் நிறுத்தக்கோரும் தீர்மானத்தை அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாண கவர்னர் டெட்போ அமெரிக்கா நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார்.தீர்மானத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் அனைத்து உதவிகளையும் நிறுத்த வேண்டும் என கோரி உள்ளார்

இந்த தீர்மானத்தின் மீது அமெரிக்க நாடாளு மன்ற வெளியுறவு கமிட்டியின் ஒப்புதல் பெறப் பட்டு தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று டெட்போ கூறினார்.

# சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து கிரிஸ் நாட்டில் பாரிய போராட்டம்



கிரீஸ் நாட்டில் அரசு மேற்கொண்டு வரும் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து நேற்று முன்தினம் நாடு முழுவதும் பொலிஸ் உட்பட அனைத்துத் துறையினரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் இதற்கிடையில் யூரோ மண்டல கடன் நெருக் கடியைத் தீர்க்கும் வகையில் சர்வதேச நிதிய மைப்பு புதிய திட்டம் ஒன்றை வகுத்து வருகிறது.

ஐ.எம்.எப் ஐரோப்பிய யூனியன், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புகளிடம் இருந்து கிரீஸ் பெற்ற கடன் தவணைகளுக்காக அரசு ஊழியர் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அந்நாடு அமுல்படுத்தி வரு கிறது.இதற்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதத்தில் நேற்று முன்தினம் நாடு முழுவதும் பாதாள ரயில், டிராம் மற்றும் புறநகர் ரயில் ஊழியர்கள் 24 மணிநேர வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டனர். பொதுப் போக்குவரத்து ஊழியர் கள் பல மணிநேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

விமான நிலையங்களில் விமானப் போக்கு வரத்து கட்டுப்பாட்டு ஊழியர்களும் வேலை செய்ய மறுத்ததால் விமானப் பயணிகள் பெரும் அவதிக் குள்ளாயினர். இவர்களோடு கிரீஸ் பொலிஸ் துறையும் சேர்ந்து கொண்டது.

# 1200 கைதிகள் புதைக்கப்பட்ட இடம் திரிபோலியில் கண்டுபிடிப்பு



(திரிபோலி)

லிபியா தலைநகர் திரிபோலியில் உள்ள அபு சலிம் சிறை வளாகத்தில், ஒரே இடத்தில், ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட கைதிகள் புதைக்கப்பட்ட இடம கண்டறியப்பட்டுள்ளதாக லிபியா இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

திரிபோலியில், அபு சலிம் சிறை உள்ளது. இதில், 1996, ஜூன் 28ல், சிறை நிலைமைகள் மிக மோசமாக இருப்பதாகவும், தங்கள் குடும்பத் தினரைப் பார்க்க விடாமல் தடுப்பதாகவும் குற்றஞ் சாட்டி சிறைக் கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

ஒரு கட்டத்தில், கைதிகள் சிறைக் கதவுகளை உடைத்து தப்பிக்க முயன்றனர். அப்போது இராணுவ வீரர்கள் வரவழைக்கப்பட்டு, கண்மூடித் தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் ஆயிரக் கணக்கானோர் இறந்திருக்கலாம் என அஞ்சப்பட் டது. இறந்தவர்கள் அனைவரும் சிறை வளாகத்தி லேயே புதைக்கப்பட்டனர்.

இதுகுறித்து, சர்வதேச சமூக உதவியுடன் ஆய் வுகள் நடத்தப்படும் என்றும், அப்போதுதான் குறிப் பிட்ட இடத்தை தோண்டி எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த இடத்தில் 1,270 பேர் புதைக்கப்பட்டிருக்கலாம் என அரசு தெரிவித்துள்ளது.

# நோபல் விருது பெற்ற பெண்மணி 71 வயதில் காலமானார்



(நைரோபி)

கடந்த அமைதிக் காக நோபல் விருது பெற்ற முதல் ஆப் பிரிகப் பெண் மணி யான வாங்கரி மாத் தாய் (71) ஞாயிற்றுக் கிழமை காலமானார். கென்யாவைச் சேர்ந்த வாங்கரி மாத்தாய், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வந்தார். நைரோபி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்த அவர், ஞாயிற்றுக்கிழமை உயிரிழந் ததாக அவரது குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.


1977-ல் கிரீண் பெல்ட் இயக்கத்தை நிறுவி அதன் மூலம் மரக்கன்று நடும் பணியைச் செய்து வந்தார் மாத்தாய். கென்யா முழுவதும் அவரது இயக்கம் இதுவரை சுமார் 5 கோடி மரக்கன்று களை நட்டு சாதனை படைத்துள்ளது.

கென்யாவில் எங்கெல்லாம் காடுகளுக்கு மனி தர்களால் அச்சுறுத்தல் இருந்ததோ அங்கெல்லாம் மாத்தாய் சென்று காடுகளை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவார். அவரது இந்தப் பணியால் கென்ய மக்கள் மட்டுமல்லாது உலக அளவிலான சுற்றுச் சூழல் ஆர்வலர்களும்,வன ஆர்வலர்களும் வெகு வாக ஈர்க்கப்பட்டனர்.

இவரது இந்த அர்ப்பணிப்பைப் பாராட்டும் விதத்தில் அமைதிக்கான நோபல் விருது 2004-ல் வழங்கப்பட்டது. இதன் மூலம் இந்த உயரிய விருதைப் பெறும் முதல் ஆபிரிக்கப் பெண்மணி என்ற பெருமையடைந்தார் இதனிடையே, 2002-ல் கென்ய நாடாளு மன்றத்துக்கு எம்.பி.யாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2003 முதல் 2005 வரை சுற்றுச்சூழல் துணை அமைச்சராகப் பதவி வகித் தார்.

# மெய்தான் பாருங்கோ...

## கண்காணிப்பு அவசியம்



ஒருக்கா கைதடியிலயிருந்து யாழ்ப் பாணத்துக்கு ஒரு அலுவலா சைக் கிள்ள வந்துகொண்டிருந்தனான் பாருங்கோ வாற வழியில அரியாலை - மாம்பழம் சந்திக்குக் கிட்ட ரண்டு ட்ரபிக் பொலிசுக்காரர் கொப்பி யொண்டைக் கையில வைச்சுக் கொண்டு, தங்களுக்குள்ள ஏதோ கதைச்சுக்கொண்டிருக்க, எதிர்ப் புறமாக ஒரு பெடியன் தலையில 'கெல்மட்டு'ப்போடாமல் வலுவீச்சா கடகடத்த ஒரு சாலி மோட்டார் சைக் கிள்ள வந்தான்.

அந்தப் பெடியன் றோட்டில தனக் குரிய பக்கமாக வந்தாலும், சைக்கிள்ள வந்த வேகத்தைப் பார்க்க எனக்கே தலையைச்சுத்துற மாதிரி இருந்தது. மோட்டார் சைக்கிளின் முன்சில்லு றோட்டில கிடந்த ஒரு கிடங்குக்குள்ள விழுந்து துள்ளி எழும்பேக்கை, கான்டிலைப் பிடிச்ச அந்தப் பெடியன்ர கையிரண்டும் தவறிப்போகப் பாத்தது. நல்லவேளை! பெடியன் இறுக்கிப் பிடிச்சிட்டான்.

ஆனாலும் பாருங்கோ! அதில சாவகச்சேரிக்குப் போற துக்கு பஸ்சுக்கு நிண்ட ஒரு பிள்ளைத்தாச்சிப் பெட்டை யோடை போய் மோதப்பாத்தான். நல்லகாலம், இசகுபிசகா ஒண்டும் நடக்கேல்லை. எண்டாலும், அதில றோட்டில கண்காணிப்புக்கெண்டு நிண்ட பொலிஸில் ஓராள் இதைக் கண்டிட்டார்.

உடன அந்தப் பொலிசு தன்ர பொக்கெற்றுக்குள்ள கிடந்த விசிலை எடுத்து ஊது ஊதெண்டு ஊத, பெடியன் திரும்பிக் கூடப் பாக்காமல் இன்னும் முறுக்கிக்கொண்டு வலுவேகமாய் போய், ஒரு குச்சொழுங்கைக்குள்ளை இறங்கி மறைஞ் சிட்டான்.

இது வந்து றோட்டுகள் தெருவுகளில நடக்கிற விசயம் தானே... எண்டு நீங்கள் சொல்லிப்போட்டுப் போகலாம். சரி போங்கோ!

ஆனா, நான் இதில சொல்லவாற விசயம் என்னவெண் டால், மோட்டார் சைக்கிள் ஓட்டிவந்தது ஒரு பெடியன் எண்டதும், நீங்கள் அவனுக்கு ஒரு இருபத்தைஞ்சு அல்லது முப்பது வயசிருக்கும் எண்டு கணக்குப் போட்டிருப்பியள்... என்ன!

அதுதான் இல்லை! அந்தப் பெடியனுக்கு குறைஞ்சது ஒரு பத்து அல்லது பன்னிரெண்டு வயசிருக்கும் எண்டவுடனை நீங்கள் ஏன் இப்பிடி மலாரடிச்சுப் போய் நிற்கிறியள்?

நாங்கள் இதில ஒண்டை யோசிக்கவேணும். என்னெண் டால், றோட்டுகளில வாகனத்தை ஓட்டுறதுக்கு ஒரு வயசுக்கட் டுப்பாடு இருக்குது. அதுக்கு லைசென்ஸ்சு வேற எடுக்க வேணும். அதோடை வாகனத்தை ஓட்டியும் பழகவேணும். கிளச்சையும், கியரையும் மாத்தத் தெரிஞ்சாக்காணும் வாகனத்தை ஓட்டித் திரியலாம் எண்டு நினைக்கக்கூடாது கண்டியளே!.

நான் இப்ப இதில கேட்கிறது என்னெண்டால், அந்த மோட்டார் சைக்கிள ஓட்டிக்கொண்டு வந்த பெடியனுக்கு வீட்டில தாய், தகப்பன் இல்லையா எண்டதுதான். ஏனெண்டா, தாய், தேப்பன்ர கட்டுப்பாட்டுக்குள்ள கண்காணிப்பில இருந்து வளர்ந்ததெண்டா, இப்படி தன்ர இஷ்டப்படி அந்தக் காலங்காத் தால அதுவும் கெல்மட்டும் போடாமல் வந்திருக்கமாட்டான்.

இளங்கன்று பயமறியாது.... எண்டும் சொல்லுவியள். அது வும் சரிதான். அதுக்காக பெடியளும் தன்னிஷ்டத்துக்கு நடக் காம, நிதானமா.... அறிவுபூர்வமா நடந்து கொண்டால் எல்லாருக்கும் நல்லதுதானே.

கண்போன போக்கில மனம் போனா காலன்தான் கூட வருவான் பாருங்கோ. உந்த ஏ -நைன் றோட்டில புத்துக்குள் ளால வெளிக்கிட்ட ஈசலுகள் மாதிரி... எதிரும் புதிருமா எக்கச்சக்கமான வாகனங்கள்... அதுவும் பாரம் சுமந்து ஓடுற வாகனங்களாத்தானே கிடக்குது.

அண்டைக்குப் பெடியன் சைக்கிள் ஓடினமாதிரிக்கு சைக்கிளின்ர சக்கரம் கிடங்குக்குள்ள விழுந்து எழும்பேக்கை, எதிர ஒரு வாகனம் வந்து மோதியிருந்தா, பெடியன்ர நிலைமை என்னவாயிருக்கும்? சாவீடுதான் மிஞ்சியிருக்கும்!

வாகனங்களின்ர சில்லுக்கை அம்பிட்டு தலை சிதறி, குடல் சிதறிக் கிடக்கிற காட்சியை பெத்ததுகள் கண்டால், அதுகளின்ர மனம் என்னபாடு படும் எண்டதை உந்தச் சின்னப்பெடியள் ஒருக்கா யோசிச்சுப் பாக்கவேணும் கண்டியளே.

பிள்ளையள் தலை நிமிரும் வரைக்கும் தாய் தேப்பனும் பிள்ளையளில கவனமா, கண்காணிப்பா இருக்க வேணும். பிள்ளை வளப்பெண்டது கரணம் தப்பினா மரணம் எண்ட மாதிரித்தான். பிள்ளையள் விடுகிற தவறான ஒரு காரியம் பின்னடிக்கு அதுகளின்ர வாழ்க்கையைப் பாழாக்கிப் போடும் பாருங்கோ.

எதுவும் தனக்குத் தனக்கு வந்தால் தானே அதன் தாற்பரியம் புரியும்.

என்ன... நான் சொல்லுறதும் சரிதானே!

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# மக்கள் விடுதலை முன்னணியினரது தலைவிதி கவலையளிக்கின்றது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று இந்த நாட்டின் மூன்றாவது சக்தியான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவிதி குறித்தும் தாம் மிகுந்த கவலையடைவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் தற்போதைய தலைவர்களான ரணில் விக்ரமசிங்க மற்றும் சோமவங்ச அமரசிங்க ஆகியோரினால் அந்தக் கட்சிகள் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளன.

கொழும்பு நகர சபைக்கு ஏற்ற சிறந்த தலைமைத்துவத்தை எமது கட்சி தெரிவுசெய்துள்ளது. நகர மக்களின் வாழ்க்கை முறை தொடர்பில் சிறந்த அனுபவமுடைய, மிகவும் திறமையான ஒருவரையே தாம் மேயர் பதவிக்கு வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளோம்.

உலகில் ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தலைநகரம் போல் கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்கு எம்மால் மட்டுமே முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இடமாற்றத்திற்கு இடைக்காலத்தடை

(கொழும்பு)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.டீ.ஆர்.வனராஜாவை பதுளைக்கு இடம் மாற்றுவதனைத் தடுக்குமாறு தெரிவித்து நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்த போதே டப்ளியூ.எல். ரஞ்சித் சில்வா மற்றும் நலீன் பெரேரா ஆகிய நீதியரசர்கள் குழாம், பொலிஸ் மா அதிபருக்கும், மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நான்கு வருடங்கள் தாம் துறைமுக பொலிஸில் பணியாற்றியதாகவும், வருடாந்த இடமாற்றத்தின் போதே மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டதாகவும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் குறித்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் தம்மை தரக்குறைவாக பேசியதைத் தொடர்ந்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் குறித்த தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். அந்தச் சம்பவத்தினை அடுத்து பதுளைக்கு தம்மை இடம்மாற்றுவதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்ததாகவும், இது கட்டாய இடமாற்றம் எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மனு விசாரணை நிறைவடையும் வரை இடைக்கால தடை உத்தரவு செல்லுபடியாகும் எனக் குறிப்பிட்ட நீதிமன்றம் ஒக்டோபர் 12 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# தமிழர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது? 5 நாட்களுக்கு முன் அறிவிப்பாராம் சம்பந்தன்

(கொழும்பு)


உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு வாழ் தமிழர்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து தேர்தல் நடைபெறுவதற்கு ஐந்து தினங்களுக்கு முன்பாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும் என தமிழத் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் காலநிதி குமரகுருபரன் கொழும்பில் நேற்று சம்பந்தனை சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். இந்த சந்திப்பின் போது சம்பந்தன், கொழும்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் தொடர்பாக பாராட்டி பேசியதாக குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தனித்துவமாக செயற்பட்டு தமிழ் மக்களின் நலன்கள் பேணக்கூடிய வகையில் செயற்படும் கட்சி ஒன்றுக்கு தமிழத் தேசிய கூட்டமைப்பு ஆதரிக்கும் என சம்பந்தன் உறுதியளித்துள்ளதாக குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

பெரும்பாண்மைக் கட்சிகளுக்கு தமிழர்கள் வாக்களிப்பதால் பயன் இல்லை என சம்பந்தன் சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமிழத் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என கூட்டமைப்பின் பிரதி தலைவர் மாவை சேனாதிராஜா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.



## கடும் காற்றில் 15 வீடுகள் சேதம்

(கொழும்பு)


புத்தள, ஹிரிலகம பகுதியில் பெய்த பலத்த மழையினைத் தொடர்ந்து வீசிய கடும் காற்றினால் 15 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது நால்வர் காயமடைந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். காயமடைந்தவர்கள் ஒக்கம்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காற்றினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பதிவு செய்யாத இல்லங்களின் சிறுவர்கள் மாற்றப்படவுள்ளனர்

(கொழும்பு)

பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களை, வேறு சிறுவர் இல்லங்களுக்கு மாற்றுவதற்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸார் இணைந்து இதனை நடைமுறைப்படுத்த உள்ளதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பதிவு செய்யப்படாத 65 சிறுவர் இல்லங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இந்த சிறுவர் இல்லங்களை சோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மேலும் கூறினார்.



உலக சுற்றுலா தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. உலக சுற்றுலாத் தலங்களில் இலங்கைக்கென்று தனியிடம் இருக்கிறது.

அந்தவகையில் கொழும்பிலிருந்து காலி செல்லும் வழியில் களுத்துறைக்கு அண்மையில் அமைந்துள்ள மாதுகங்கை அனைவரது மனதினையும் கொள்ளைகொள்ளும் ஓர் அற்புத இடம்.

கடற்கரைக்கு பிரபலமான இந்த காலி வீதியில் நிலப்பரப்பிற்குள் நீண்டு செல்லும் இந்த மாதுகங்கையில் பயணம் செய்வதற்கு உல்லாசப் பயணிகள் அதிகம் விரும்புகின்றனர். அந்த நீரோட்டத்தின் இடைநடுவில் பல தீவுக் கூட்டங்கள் இருக்கின்றன. அவற்றினை பார்வையிடுவதற்கு படகுகள் பயன்படுத்தப் படுகின்றன.

இந்த அழகிய மாதுகங்கையில் உல்லாசப் பயணிகள் படகுச் சவாரி செய்வதைக் காணலாம்.

# கலாசார பாரம்பரியங்களை சிதைப்பதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் கலாசார பாரம்பரியங்களை சிதைவடையச் செய்யும் நோக்குடன், எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தல் எனும் போர்வையில் ஓரினச் சேர்க்கையை ஊக்குவிப்பதற்கு சர்வதேச நிறுவனமொன்று கோடிக்கணக்கான ரூபாய்களை வழங்கியுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எயிட்ஸ், மலேரியா, காசநோய் என்பவற்றை தடுப்பதற்கான உலக நிதி எனும் சர்வதேச அமைப்பானது, இலங்கையிலுள்ள சமூக நிறுவனமொன்றின் மூலமாக இந்த சதியில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸைக் கட்டுப்படுத்தல் என்ற போர்வையில் இந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆணுறைகளும், ஒருவகைத் திரவமும் ஓரினச்சேர்க்கையாளர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓரினச் சேர்க்கையாளர்களினால் நடாத்தப்பட்டு வரும் தலைமை அலுவலகம் மற்றும் நகர அலுவலகங்களின் முகவரிகள் உள்ளிட்ட தகவல்களும் அந்த செய்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகங்கள் பாடசாலைகளுக்கு அண்மையிலேயே அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பெற்றோர்கள் தமது குழந்தைகளை பாதுகாத்துக் கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

சர்வதேச அமைப்பினால் 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கையின் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய எய்ட்ஸ், காசநோய் கட்டுப்பாடுத் திட்டம், மற்றும் சர்வோதய அமைப்புகளினூடாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த குற்றச்சாட்டை அவ் அமைப்பு மறுத்துள்ளது.

இவ் அமைப்பின் இந்நிதியானது, முற்றிலும் எய்ட்ஸை இலங்கையில் கட்டுப்படுத்துவதற்கும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்குமே பயன்படுத்தப்படுவதாக குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது. ஆணுறைகள் மற்றும் திரவம் என்பன இந்த நோக்கத்திற்காகவே விநியோகிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளன.


## மூழ்கிய படகிலிருந்த ஐவரை காணவில்லை

(கொழும்பு)

தேவேந்திரமுனை கடற்பரப்பிற்கு அண்மையில் மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்ததில் ஐவர் காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன்தினம் மதியம் அனர்த்தத்திற்கு உள்ளான குறித்த படகிலிருந்த நால்வர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். குறித்த படகிலிருந்த ஏனைய மீனவர்களை மீட்பதற்கு காலியில் இருந்து கடற்படை வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

# அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களினது செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆராய்ந்து அறிந்துள்ளார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் அமைச்சரது தலைமையில் பிரதியமைச்சர் வீரக்குமார திஸாநாயக்க சகிதம் துறைசார்ந்தோரிடம் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சின் கீழான நிறுவனங்களினது செயற்திட்டங்கள் உற்பத்திகள் தொடர்பாகவும் அவற்றினது சந்தை வாய்ப்புகள் தொடர்பாகவும் அமைச்சர் இதன்போது கேட்டறிந்து கொண்டார். அத்துடன் இவ்வாறான உற்பத்திகளை மென்மேலும் மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் அமைச்சுக்கு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவது மட்டுமல்லாது குறிப்பிட்ட நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதன்போது அமைச்சர் உறுதிமொழி வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் வி.ஜெகராஜசிங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

## ஐ.நா.வின் செயலற்ற...

தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் தங்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் மேற்கொண்டு வரும் முன்னுக்கு பின் முரணான நடவடிக்கைகளால் தாழ்வு நிலைக்குச் செல்வதை கனடா தொடர்ந்தும் எதிர்த்து வந்துள்ளதாக தெரிவித்த கனேடிய வெளிவிவகார அமைச்சர், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பொதுநலவாய நாடுகள் அமைப்பில் தென்னாபிரிக்க இனவெறி அரசாங்கத்தை இணைத்துக் கொள்வதற்கு கனடா எதிர்ப்பை வெளியிட்டதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன், நாடுகளின் தனித்துவத்தை கனடா மதித்தாலும், சிறுபான்மையினருக்கான மனித உரிமைகள் மற்றும் 'அடிப்படை சுதந்திரங்கள் மறுக்கப்படுகின்ற போது அதற்காக குரல் கொடுப்பது எம் அனைவரின் பொதுக்கடமை எனவும் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் மற்றும் மனிதஉரிமை விவகாரங்களில் மேம்பாடு காணப்படாது விட்டால், 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என கனேடிய பிரதமர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கை விவகாரங்கள் தொடர்பில் கனேடிய வெளிவிவகார கொள்கையில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களின் வெளிப்பாடாகவே கனேடிய வெளிவிவகார அமைச்சரின் உரையும் கருதப்படுகின்றது.

## பாதுகாப்பு வலயம்...

பிரதிநிதி தனக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக இத்தகவல் குறிப்பில் ரொபேட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மோசமான காலநிலை காரணமாக இரு நாட்களாக ஜெட் போர் விமானங்கள் பறக்கவில்லை என பதிலளித்த கோத்தாபய ராஜபக்ஷ, இதன் போது பொது மக்கள் கொல்லப்பட்டமை குறித்து வியப்புடன் கேள்வி எழுப்பியதாகவும் விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் பொதுமக்களுக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், இப்பாதுகாப்பு வலயங்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என களத்தில் இருக்கின்ற படைத் தளபதிகளுக்கு பணிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் ரொபேட் ஓ பிளேக் வலியுறுத்தியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

## இராஜதந்திர...

சமுகமளித்து பதிலளிக்குமாறு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்க நீதிமன்றம் கடந்த 23 ஆம் திகதி அழைப்பாணை அனுப்பியிருந்தது.

இவ்விவகாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்திர வதிவிடப் பிரதிநிதி என்ற வகையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைய இராஜதந்திர பாதுகாப்பும் சிறப்புரிமைகளும் உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சவேந்திர சில்வா தனது கடமையை செய்வதற்கு இடையூறு ஏதும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது ஐக்கிய நாடுகள் சபையினதும், இவ்வமைப்பின் நிகழ்வுகளை நடத்தும் நாட்டினதும் கடமை என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவேந்திர சில்வாவின் பாதுகாப்பை நீடித்து அவருக்கு அவரது இராஜதந்திர கடமைகளை திறம்படச் செய்ய வழிசமைத்துக் கொடுக்குமாறு பான் கீ மூனிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் இராஜதந்திரி என்ற வகையில், சவேந்திர சில்வா தன் கடமையை சுதந்திரமாக செய்வதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை வெளிவிவகார அமைச்சு மேற்கொள்ளும் என இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 36 ஆயிரத்து...

இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் 8 ஆயிரம் பேரும், வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேரும், சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேரும் தங்கியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 194 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் 11 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 114 பேர் மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு மீள்குடியேற்றப்பட வேண்டியவர்களில் சிலர் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் மேலும் பலர் தமது ஏற்பாட்டில் சில இடங்களில் வீடுகள் அமைத்துத் தங்கியுள்ளனர்.

அத்துடன் வலிகாமம் ஊறணிப் பகுதியில் மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். இப்பகுதி மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக கடந்த 2 தினங்களுக்கு முன்னரும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிடம் கலந்துரையாடப்பட்டது. விரைவாக இப்பகுதியில் மக்கள் மீள்குடியமர ஒழுங்குசெய்து தருவதாக அவர் உறுதியளித்துள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு...

உடனடியாக நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி நியூயோர்க் பயணத் திட்டத்தை மாற்றிக் கொள்ளவோ அங்கிருந்து தப்பியோடவோ மாட்டார் என்று வெளிவிவகார அமைச்சு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர்...

இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சுடன் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறுவர்களுக்கான நீதிமன்றங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் முறையான திட்டங்களை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி திறைசேரிச் செயலாளருக்கு விசேட உத்தரவொன்றை பிறப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# பழுதடைந்து வருகின்றன இலங்கையரின் பற்கள்

(கொழும்பு)

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் இலங்கையர் ஒவ்வொருவரினதும் குறைந்த பட்சம் ஆறு பற்களாவது படிப்படியாக சேதமடைந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலமாகவே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை சனத்தொகையில் 120 மில்லியன் உட்குழிவு உடைய பற்களை கொண்டோர் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் அதிகமானோர் வெற்றிலை சப்பும் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 80 சதவீதமான பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் வெற்றிலை சப்பும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

பாபுல், பான்பராக் போன்ற பல்வகையான வெற்றிலைகளை பல்வேறு வயதினரும் பயன்படுத்துகின்றனர்.

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பிற்கும் தூத்துக்குடிக்குமிடையிலான ஸ்கோட்டியா பிரின்ஸ் பயணிகள் கப்பல் சேவையானது நேற்றுமுன்தினம் மாலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்றுமாலை தூத்துக்குடிக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளது. கடந்தவாரம் இக்கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாகவே குறித்த சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. கொழும்புக்கும் தூதுக்குடிக்கும் இடையிலான இந்த பயணிகள் கப்பல் சேவையானது முப்பது வருடங்களின் பின்னர் இவ்வருடம் ஜூன் மாதம் 13ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ருத்ரகுமாரனுக்கு...

கொள்வனவு செய்வதற்காக ருத்ரகுமாரன் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை புலிகளுக்கு வழங்கியமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

புலிகளுக்கு ஆதரவாகவும், படையினருக்கு எதிராகவும் வழக்குகளைத் தொடுக்கும் நடவடிக்கைகளை ருத்ரகுமாரன் ஆரம்பித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## வட, கிழக்கிலுள்ள...

தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, வடக்குக் கிழக்கிலுள்ள படைமுகாம்களை இன்னும் பல ஆண்டுகளுக்கு உஷார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் இவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், சர்வதேசமோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகளோ வலியுறுத்துவது போன்று படைமுகாம்களை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றினால், மீண்டும் பயங்கரவாதிகளுக்கு இடமளிப்பதாகவே அமையும் எனவும் இவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில், புலிகளின் ஆயுதப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், பிரபாகரனின் அரசியல் பயங்கரவாதம் இன்னும் ஒழிக்கப்படவில்லை.


இதனை ஒழிப்பதாயின் பரந்தளவிலான நடவடிக்கைகள் அவசியம். இன்று உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச அளவிலும் புலிகளின் அரசியல் பயங்கரவாதம் தீவிரமடைந்துள்ளது. இதனை முற்றாக ஒழித்துக்கட்டினால் மாத்திரமே புலிப் பயங்கரவாதம் முற்றாக அழிந்ததாக கருதமுடியும்.

இன்று இலங்கை முன்னுள்ள சவாலும் அதுதான். விடுதலைப் புலிகள் சர்வதேச அளவிலும் உள்நாட்டு அரசியலிலும் தமிழீழத்தை நோக்கிய பயணத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதனை தோல்வியடையச் செய்ய வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் படையினரை வெளியேற்றுவது என்பது நாட்டிற்கு பாரிய அச்சுறுத்தலான விடயமாகும்

புலிகளின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் உள்நாட்டில் உலாவும் தமிழ் அரசியல் கட்சிகளின் தேவையற்ற பிரசாரங்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது எனத் தெரிவித்தார்.

செய்திப்பாணம்

**சமாதானம் மாபெரிய சங்கதியாம் இலகுவாய்**
**அமாவாசைக் கொருக்கா அமையாதாம் - தமாஷான**
**கதையிது திருப்தியைக் காண்பதும் தமிழரல்ல**
**விதைத்த சர்வதேசமென் விண்!**



# கூட்டமைப்புடனான பேச்சு ஐ.தே.கட்சி ஆதரவளிக்கும்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் தமிழத் தேசிய கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு வழங்கும் என கட்சியின் தேசிய அமைப்பாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் அவர் இவ்வாறு கூறினார். தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய ரவி கருணா நாயக்கா மேலும் தெரிவிக்கையில்,

வல்லரசு நாடுகள் இனப்பிரச்சினையை முன்வைத்து இலங்கையின் இறைமையில் தலையிட முற்படுகின்றன. அதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உரிய முறையில் அரசாங்கம் பேச்சு நடத்தினால் சர்வதேச நாடுகளின் தலையீடுகளைத் தவிர்க்கலாம்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கும் அரசாங்கத்தின் யோசனை இன்னமும் நிறைவேறவில்லை. அது தொடர்பாக அரசாங்கத்திடம் சரியான நிலைப்பாடு எதுவும் இல்லை. அரசாங்கம் காலத்தை கடத்துவது போல் தெரிகின்றது. கொழும்பு நகரில் சேரிப்புறங்களில் வாழும் மக்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

கொழும்பை அபிவிருத்தி செயவது நல்லது ஆனால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும். கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வாழும் சேரிப்புற மக்களுக்கான வீடுகளை அமைதது் கொடுக்கவுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. வாக்குகளை பெறும் நோக்கில் அரசாங்கம் அவ்வாறு கூறுகின்றது. மக்கள் அதனை நம்பிவிடக்கூடாது என்று ரவி கருணாநாயக்கா வலியுறுத்தினார்.

# மனநலப் பிரச்சினைக்கு நூறு வீத சிகிச்சை

(கொழும்பு)

பிள்ளைகளின் மனநலப் பிரச்சினைகள் தொடர்பாக பெற்றோர் கவனம் செலுத்தாமையானது இளம் வயதில் அவர்கள் கடும் மனநல பாதிப்புக்களுக்கு இலக்காக நேரிடும் என தேசிய மனநல சுகாதார ஆய்வு நிறுவனம் குறிப்பிடுகின்றது. தற்கொலை அதிகரிப்பதற்கும் இந்த நிலைமை காரணமாக அமைந்துள்ளது என அந்த நிறுவனத்தின் மனநல விசேட வைத்திய நிபுணர் கபில ரணசிங்க கூறினார்.

இளம்வயதில் ஏற்படுகின்ற மனநலம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நூறுவீதம் முறையான சிகிச்சைகள் விஞ்ஞானத்துறையில் உள்ளதாக விசேட வைத்திய நிபுணர் தெரிவித்தார்

# இலங்கை அகதிகள் நெதர்லாந்துக்கு

(ரோமானியா)

ரோமானியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் சிலர், அடுத்த மாதம் நெதர்லாந்துக்கு மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதி அந்தஸ்து கோரி அவுஸ்ரேலியாவுக்கு சென்ற இலங்கையர்கள் சிலர், கடந்த வருடம் ரோமானியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களில் சிலர் தற்போது நெதர்லாந்துக்கு மாற்றப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அங்குள்ள இலங்கை அகதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கூறியுள்ளனர்.

தமது வாழ்கை தொடர்ந்தும் அச்சம் சூழ்ந்ததாகவே காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். தங்களை அவுஸ்ரேலி யாவிலேயே குடியேற்றம் செய்யுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்

# கல் உடைக்கும் தொழிலாளி வெடி விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்செழுப் பகுதியில் கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபட்ட ஒருவர் கல் உடைப்பதற்காக வைக்கப்பட்ட வெடி தவறுதலாக வெடித்ததில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த அமிர்தநாதன் இராசகிளி (வயது-41) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர் பாரிய கற்களை தகர்ப்பதற்காக வெடியை வைத்தவேளை அது தவறுதலாக வெடித்துள்ளது. இதனால் இவரது இரண்டு கைகள் உட்பட பல இடங்களில் கடுமையான காயங்கள் ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா,எஸ்)

# போக்குவரத்துச்சபை பேருந்து வவுனியா லொறியுடன் மோதியது

## 25 பேர் காயம்



(கொழும்பு)

அநுராதபுரம் - யாழ்ப்பாண வீதி றாமகலே பகுதியில் நேற்று நடைபெற்ற வாகன விபத்தில் 25 பேர் காயமடைந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி பாலித்த நிஸங்க தெரிவித்தார். யகல்ல பகுதியிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து இயந்திர கோளாறு காரணமாக எதிரே கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியுள்ளது.

இதன்போது பேருந்தின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளும் பேருந்துடன் மோதி பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால் பேருந்து மற்றும் லொறிகளின் சாரதிகள் உட்பட 25 பேர் காயங்களுக்குள்ளாகி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 12 பேர் பெண்களாவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச மற்றும் அரச சார்பற்ற உதவியுடன் யாழில் மீளக்குடியமர்ந்தோருக்கு வீடுகள்

மீள்குடியேற்ற அமைச்சினால் 200 வீடுகளும், சர்வதேச செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தினால் 250 வீடுகளும் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன. மேற்படி இருவேறு திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த 450 குடும்பங்கள் பயனடைவார்கள் என யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சின் உதவி பெறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இனாமாகவும், இரண்டு இலட்சம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கடனாகவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, ச.செ.ச.ச. வழங்கப்படும் இரண்டரை இலட்சம் பெறுமதியான வீடு முற்றுமுழுதாக இலவச உதவி அடிப்படையிலேயே வழங்கப்படவுள்ளது.

மேற்படி வீட்டுத்திட்டங்களுக்கு உரிய பயனாளிகள் ஒவ்வொரு பிரதேச செயலரினாலும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களின் பதிவுகளின் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைக்க உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் மீள்குடியேற்ற அமைச்சின் உதவியில் வேலணையில் -05, நல்லூரில் - 05, சண்டிலிப்பாயில் - 36, உடுவிலில் - 07, தெல்லிப்பளையில் - 30, கோப்பாயில் - 05, பருத்தித்துறையில் - 02, காரைநகரில் - 10 என்ற எண்ணிக்கையில் முதற்கட்டமாக 100 வீடுகள் அமைக்க உதவிகள் வழங்கப்படவுள்ளன. இவற்றுக்கான உதவி நிதியானது 6 கட்டமாக வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் 60 ஆயிரம் குடும்பங்கள் நிரந்தர வீடுகளற்று வசிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# சம்பியன்ஸ் லீக் ருவென்ரி -20

தெற்கு அவுஸ்ரேலியா எதிர் கொல்கத்தா நைட்றைடர்ஸ்




தெற்கு அவுஸ்ரேலியா 188/5 (20 ஓவர்) கொல்கத்தா றைட் றைடஸ் 169/9 (20 ஓவர்) 19 ஓட்டங்களால் தெற்கு அவுஸ்ரேலியா வெற்றி.

# இலங்கையரை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்ப முற்பட்ட இருவர் கைது

இலங்கைத் தமிழர்களை அவுஸ்ரேலியாவுக்கு படகின் மூலம் கொண்டு செல்ல முற்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் மேலும் இருவர் நேற்று தமிழ்நாடு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமான முறையில் படகின் மூலம் செல்லவிருந்த 37 இலங்கையர்கள் கடந்த 25ஆம் திகதி பொலிஸாரால் சுற்றி வளைக்கப் படடிருந்தனர்.

இந்நிலையில், இவர்களை அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்ல முற்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், 37 இலங்கையர்களையும் அவுஸ்ரேலியாவுக்கு கடத்த உதவி செய்த 9 பேரை கடந்த 25ஆம் திகதி இரவு பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 9 பேரில் 5 இலங்கையர்களும், 4 கொத்தமங்கலம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரி,இந்நிலையில் மீட்கப்பட்ட 37 இலங்கையர்களுக்கும் எந்தவொரு தீவிரவாத அமைப்புகளுடனும் தொடர்பில்லை என ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# தமிழினிக்கு புனர்வாழ்வு அளிக்க சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப்பிரமணியம் சிவகாமி எனப்படும் தமிழினிக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழினிக்கு புனர்வாழ்வு அளித்து மீளவும் சமூகத்துடன் இணைப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றம், தமிழினியின் சட்டத்தரணிக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கொழும்பு நீதிமன்றின் பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழினி மீது குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனால், அவர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழினியின் இளமைக் காலத்தை புலிகள் பறித்துக் கொண்டதாகவும், தற்போது அவர் சிறையில் வாடுவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி இடம்பெயர் முகாம் ஒன்றில் வைத்து தமிழினியை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழினி 1991 ஆம் ஆண்டு புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்.

இதேவேளை, தமிழினி தொடர்பான விசாரணை அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.